பக்கங்கள் :பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 09 ஞாயிற்றுக்கிழமை (25.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 359

# பாதுகாப்பை மேம்படுத்தாமல் மக்களை மீளக்குடியமர்த்தாதீர்!

## திருமலை நிலைமை குறித்து யு.என்.எச்.சி.ஆர் எச்சரிக்கை

ஜெனிவா,நவம்பர்25

இடம்பெயர்ந்தவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக்குடியமர்வதற்கு அங்கு அவர்களுக்குரிய பாதுகாப்பு மிகவும் முக்கிய தேவை. அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு.

தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவோரிடம் நம்பிக்கையை வளர்த்து மீளக்குடியமர்தலை பலப்படுத்தவேண்டும் என்று அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றோம்.

இவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முன்னர் அவர்களை மீளக்குடியமர்த்த வேண்டாம் என்று எச்சரிக்கின்றோம்.

இவ்வாறு திருகோணமலைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் (யு.என்.எச்.சி.ஆர்) அறிவித்துள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த 250 இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்ட பின்னர் மீண்டும் மட்டக்களப்புக்குச் சென்றுள்ளனர்.

இது குறித்து அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் பேச்சாளர் ஜெனிபர் பகோனிஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சரம்

### களுதாவளையில் கிளைமோர்; பொலீஸார் இருவர் பலி!

மட்டக்களப்பு,நவ.25

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடிப் பகுதியில் களுதாவளையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும் கான்ஸ்டபிள் ஒருவரும் கொல்லப்பட்டனர். (அ-1)

### நாவற்குளத்தில் நேற்று மோதல்

கொழும்பு, நவ.25

வன்னியில் படையினரின் முன்னரங்க நிலைகளுக்குள் நேற்று ஊடுருவ முனைந்த விடுதலைப் புலிகளுடன் மோதல்கள் இடம்பெற்றதாக பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

ஓமந்தைக்கு கிழக்கே நாவற்குளம் பகுதியில் இடம்பெற்ற மோதல்களை அடுத்து புலிகளின் பதுங்குகுழிகளை அழித்ததாகவும் ஏழு விடுதலைப் புலிகளைக் கொன்றதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

### மனைவி கொலை: பிரிகேடியர் 14 நாள் விளக்கமறியலில்

கொழும்பு,நவ.25

மனைவியை சுட்டுக்கொலை செய்ததாக இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் சந்தன ரூபசிங்க கைதுசெய்யப்பட்டு 14 நாள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மகோலப் பகுதி தெவலெ வீதியில் உள்ள வீட்டில் சந்தன ரூபசிங்கவின் மனைவி திஜாங்கனி ரூபசிங்கவை (வயது 37)

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய அமைப்பிலிருந்து பாகிஸ்தான் இடைநிறுத்தப்பட்டது

கம்பாலா,நவ.25

பொதுநலவாய நாடுகள் அமைப்பிலிருந்து பாகிஸ்தான் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

கம்பாலாவில் நேற்று முடிவடைந்த பொதுநலவாய நாடுகள் அமைப்பின் உச்சி மாநாட்டில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் இந்த முடிவுக்கு தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர்கள் குழு மட்டத்தில் பாகிஸ்தானை பொதுநலவாய அமைப்பில் இருந்து இடைநிறுத்தும் முடிவு எடுக்கப்பட்டிருந்தது. இந்த முடிவை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வன்மையாக்க கண்டித்திருந்தார்.

இலங்கை எதிர்ப்புத் தெரிவித்தபோதிலும் பாகிஸ்தானை இடைநிறுத்தும் முடிவு உச்சிமாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டது. (அ-1)

## பல்கலைக்கழக வளாக வங்கியின் பாதுகாப்பு ஊழியர் சுட்டுக்கொலை

### ஆயுததாரிகளால் கலைத்து கலைத்துச் சுடப்பட்டார்!

யாழ்ப்பாணம்,நவ.25

யாழ்.பல்கலைக்கழக வளாகத்துக்குள் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு நிறுவன ஊழியர் ஒருவர் ஆயுததாரிகளால் கலைத்துக் கலைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கரவெட்டி யார்க்கருவைச் சேர்ந்த கந்தவனம் கேதீசன்(வயது 26) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவர் ஆவார்.

யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவ இடத்தில் நேற்றுக் காலை விசாரணைகளை மேற்கொண்டார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரவு-செலவுத் திட்டம்:

## முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எதிர்த்து வாக்களிக்கும்?

கொழும்பு,நவ.25

வரவு - செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு அடுத்த மாதம் 14ஆம் திகதி இடம்பெறும் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்த்து வாக்களிக்கவேண்டும் என்று கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கோரியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு நடந்த கட்சியின் உயர் அரசியல் பீடத்தின் கூட்டத்திலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

இது தொடர்பாக இறுதி முடிவை மேற்கொள்ள கட்சியின் அரசியல் குழு எதிர் வரும் 30ஆம் திகதியும் செயற்குழு டிசெம்பர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சரம்

### பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகமாக இந்தியர்

கம்பாலா, நவ.25

பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் புதிய செயலாளர் நாயகமாக இந்தியாவைச் சேர்ந்த கமலேஷ் சர்மா தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் இப்போது பிரிட்டனில் இந்தியத் தூதராகப் பணிபுரிகிறார்.

கம்பலாவில் நேற்று முடிவடைந்த பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சிமாநாட்டில் இத்தெரிவு இடம் பெற்றது. (12ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி ஈரான் செல்கிறார்

கொழும்பு,நவ.25

உகண்டாவின் தலைநகர் கம்பாலாவில் நடைபெற்ற பொதுநல வாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கிருந்து ஈரானுக்கு இன்று முதல் 4 நாள் விஜயம் ஒன்றை மேற்கொள்கிறார்.

இலங்கைக்கு எரிபொருள் விநியோகம் மற்றும் இரு தரப்பு உறவுகள் தொடர்பாக ஜனாதிபதி பேச்சுக்கள் நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

### மிதிவெடியில் சிக்கி அதிகாரி மரணம்

கொழும்பு, நவ.25

மன்னார் மாந்தைப் பகுதியில் நேற்றுக் காலை 5.30 மணியளவில் மிதிவெடியில் சிக்கிய படை அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார். மூன்று படையினர் காயமடைந்தனர் என்று ஊடகத் தகவல் நிலையம் அறிவித்தது. (அ-1)

### சுவிஸில் மாவீரருக்கு வணக்கப் பூசை

ஜெனிவா, நவ.25

சுவிற்ஸர்லாந்தில் உள்ள இந்து ஆலயங்களில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மாவீரர் வணக்கப் பூசை வழிபாடு நடைபெற்றது.

சைவத் தமிழ்ச்சங்கத்தினர் பரிபாலனம் செய்து வரும் சூரிச் சிவன் கோயிலில் சிறப்பாக அமைக்கப்பட்ட மாவீரர் வணக்க நினைவாயலத்தில் மாவீரர் விசேட பூசை நடைபெற்றது.

சிறப்பு பூசை வழிபாட்டுடன் தொடங்கிய நிகழ்வு, மாவீரர் துயிலும் இல்ல பிரதான சுடர் ஏற்றப்பட்டு பின்பு மாவீரர்

(12ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# டெஸ்டில் சிறந்த துடுப்பாட்டம்: ஐ.சி.சி. தர வரிசையில் முன்னேறி சாதனை படைத்தார் சங்ககார!



சர்வதேச கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்களுக்கான டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் குமார் சங்ககார மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இதன்போது அவர் வருடத்துக்கான சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் விருதை வென்ற பாகிஸ்தானின் மத்தியதர வரிசை துடுப்பாட்ட வீரர் மொஹமட் யூசுப்பை பின்தள்ளியே மூன்றாவது இடத்துக்கு முன்னேற்றம் கண்டுள்ளார். ஆஸ்திரேலியாவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சங்ககார முதல் இன்னிங்ஸில் 57 ஓட்டங்களைக் குவித்ததோடு இரண்டாவது இன்னிங்ஸில் அபாரமாக ஆடி 192 ஓட்டங்களைப் பெற்றார். இதனைத் தொடர்ந்து ஐ.சி.சியினால் வெளியிடப்பட்ட புதிய தரவரிசை பட்டியலிலேயே சங்ககார இந்த முன்னேற்றம் கண்டுள்ளார். ஐ.சி.சி.டெஸ்ட் தரவரிசை பட்டியலில் அதிக முன்னேற்றம் கண்ட இலங்கை துடுப்பாட்ட வீரராகவும் இதன்மூலம் சங்ககார பதிவானார்.

இதற்கு முன்னர் அரவிந்த டிசில்வா, மஹேல ஜெயவர்த்தன மற்றும் முன்னாள் அணித்தலைவர் அர்ஜுன ரணதுங்க ஆகியோர் துடுப்பாட்ட வீரர்களுக்கான டெஸ்ட் தரவரிசை பட்டியலில் 5 ஆவது இடம்வரை




முன்னேற்றம் கண்டுள்ளனர்.

அத்துடன் சங்ககார தற்போது துடுப்பாட்ட வீரர்களுக்கான டெஸ்ட் தரவரிசை பட்டியலில் 919 புள்ளிகளை பெற்றுள்ளார். இது இலங்கை துடுப்பாட்ட வீரர் ஒருவர் டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் பெற்ற அதிகூடிய புள்ளிகளாகவும் சாதனை படைத்தது.

இதற்கு முன்னாள் இலங்கைத் துடுப்பாட்ட வீரர்கள் எவரும் 900 புள்ளிகளை அடைந்ததில்லை. ஐ.சி.சி துடுப்பாட்ட வீரர்களுக்கான டெஸ்ட் தரவரிசை பட்டியலில் ரிக்கி பொன்டிங் 936 புள்ளிகளுடன் முதலாவது இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளார். எனினும ஒரு புள்ளியை மாத்திரம் குறைவாகப் பெற்றுள்ள தென்னாபிரிக்காவின் சகலதுறை ஆட்டக்காரர் ஜக் கலிஸ் இரண்டாவது இடத்தில் காணப்படுகிறார்.

கலிஸ் அண்மையில் நடந்து முடிந்த பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நான்கு இன்னிங்ஸ்களில் மூன்று சதங்களைப் பெற்றார். அத்துடன் நியூசிலாந்துடனான டெஸ்ட் தொடரில் இரண்டு சதங்களை குவித்தமை குறிப்பிடத்தக்கது.

### மன்னிப்பு கோரினார் நடுவர்

ஹோபார்டில் இடம்பெற்ற இலங்கை ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது போட்டியில் சங்ககாரவின் ஆட்டமிழப்பு தவறான முடிவு என்பது பலர் அறிந்த விடயம்.

தனது தவறான தீர்ப்புக்கு நடுவர் கோர்ட்சன் பின்பு சங்ககாரவிடம் மன்னிப்பு கோரியுள்ளார். அன்றைய தினம் சங்ககார களத்தில் இருந்திருந்தால் தனது ஏழாவது இரட்டைச் சதத்தை பெற்றிருப்பது மட்டுமல்லாது சில வேளைகளில் போட்டியின் போக்கையும் திசைமாற்றியிருக்கலாம்.

நடுவர் கோர்ட்சன் மன்னிப்பு கோரியமை குறித்து அணித்தலைவர் மஹேல கூறும்போது, குமார் அச்சந்தர்ப்பத்தில் மிகவும் ஏமாற்றத்திற்குள்ளானார். எனினும் நடுவரின் தீர்ப்பை மதித்து அவர் மைதானத்திலிருந்து வெளியேறினார்.

பந்து அவரது தோளிலும் தலைக் கவசத்திலும்தான் பட்டுச் சென்றதுஎன்ற விடயம் அரை மணித்தியாலங்களுக்குள் தெரிந்தது. இருப்பினும் பிடியை எடுத்த பொன்டிங் அது ஆட்டமிழப்பு என நடுவரிடம் கேள்வியெழுப்பியமையையடுத்து அத்தீர்ப்பு வழங்கப்பட்டது. இப்போட்டியில் குமார் சங்ககார 192 ஓட்டங்களைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

### அத்தபத்து ஓய்வு

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மார்வன் அத்தபத்து சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடிய அத்தபத்து தனது முடிவை இலங்கை கிரிக்கெட் இடைக்கால சபைக்கு கடிதம் மூலம் அறிவித்தார்.

இலங்கை அணி தேர்வுக் குழுவை கடுமையாக விமர்சித்த அத்தபத்து மீது இலங்கை கிரிக்கெட் இடைக்கால சபை ஒழுக்காற்று விசாரணை நடத்த உள்ள நிலையிலேயே அவர் தனது ஓய்வை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரராக செயற்பட்டு வந்த மார்வன் அத்தபத்து 90 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். இதில் அவர் 16 சதங்களும் 17 அரைச்சதங்களும் அடங்கலாக 5502 ஓட்டங்களை குவித்துள்ளார். மார்வன் அத்தபத்து டெஸ்ட் போட்டிகளில் பெற்ற அதிகூடிய ஓட்டங்கள் 249 ஆகும்.

### டில்லி

இது தவிர 268 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ள அத்தபத்து 11 சதங்களும் 50 அரைச்சதங்களும் அடங்கலாக 8529 ஓட்டங்களை குவித்துள்ளார். அவரது ஒருநாள் போட்டிகளின் ஓட்ட சராசரி 37.57 ஆகும். இது மட்டுமல்லாது சனத்ஜயசூரியவை தொடர்ந்து அத்தபத்து கடந்த 2003 ஆம் ஆண்டு தொடக்கம் மூன்று வருடங்கள் இலங்கை அணியின் தலைவராகவும் செயற்பட்டுள்ளார்.

இதனிடையே ஓய்வை அறிவித்துள்ள அத்தபத்து இலங்கை கிரிக்கெட் இடைக்கால சபையினால் தடை விதிக்கப்பட்டுள்ள இந்தியன் கிரிக்கெட் லீக்கில் (ஐ.சி.எல்) விளையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியன் கிரிக்கெட் லீக்கினால் அண்மையில் அறிவிக்கப்பட்ட அணி விவரத்தில் அத்தபத்துவின் பெயரும் இடம்பிடித்துள்ளது.

இதில் அவர் ''டெல்லி ஜெட்'' அணிக்கு தலைவராகச் செயற்படவுள்ளார். இது மட்டுமல்லாது அத்தபத்து ஆஸ்திரேலிய பிராந்திய கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாட திட்டமிட்டுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வவுனியா இறம்பைக்குளம்
மகாவித்தியாலயத்தில் 28.10.2007 அன்று
நடைபெற்ற விழாவின்போது 'தண்ணுமை
வேந்தன்'', ''மிருதங்கக் கலைவாரிதி''
ஆகிய பட்டங்களைப் பெற்ற பிரபல
மிருதங்க வித்துவான்

**திரு. ம.சிதம்பரநாதன் (மூளாய்)**

அவர்களை 2007 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண கௌரவ ''ஆளுநர் விருது'' வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையிட்டு வாழ்த்துவதுடன் அவர் இசைத்துறையில் மேலும் பல பட்டங்களைப் பெற்று அவரது குடும்பமும் வாழ வாழ்த்துகின்றோம்.

சிவராசா குடும்பம்
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

(68290)

## CATHOLIC COLLEGE OF HIGHER STUDIES

EXPRESSES ITS
APPRECIATION AND CONGRATULATIONS TO

**Miss E.Shobini**
[Administrative Asst. CCHS]
**On being conferred with the certificate of HNDM at BMICH on 23.11.2007.**



**Registrar.**

(68275)

D.D. ஜயசேகராவின்,
ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

## "நாசானந்த தைலம்"

தெய்வீக பரிகாரம் பீனிசத்திற்கு

தலை, கண், மூக்கு, வாய், முகம் ஆகியவற்றில் உண்டாகும் பருவு, செங்கட்டி, குஷ்டம், பல்வலி, தும்மல், தலைவலி, சளி முதலியவற்றையும் சருமத்தில் உண்டாகும் 21 பீனிச வியாதிகளையும் குணப்படுத்தி சரீர ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

இத்தைலத்தை தலையில் பாவிக்கவும், நாசியில் உறிஞ்சவும், நாசியின் ஒரு பக்கம் 10 சொட்டு வீதம் உறுஞ்சவும், ஒரு தேக்கரண்டி அளவு வெந்நீர் கலந்து உட்கொள்ளவும், வாய் கழுவவும், பல்லில் பூசவும்.

Manufactured By:
**Vedagedera Herbals,**
Jeyasekara Vedagedera,
Negombo,
Po. Box 04, Sri Lanka.
AR/PR No - 43

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:
**சிவா நறுமணப்பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/54457)


## மரண அறிவித்தல்

### கந்தவனம் கேதீசன்

(கோல்டன் ஈகிள் பாதுகாப்பு உத்தியோகத்தர், மக்கள் வங்கி, யாழ். பல்கலைக்கழகம்)



கரவெட்டி கிழக்கைச சேர்ந்த கந்தவனம் கேதீசன் நேற்று(23.11.2007) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கந்தவனம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் மலர்விழியின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2007) ஞாயிற்றுக்கிழமை பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேருண்டை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவிததலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யாக்கரை றோட்,
கரவெட்டி கிழக்கு.

தகவல்:
சின்னதம்பி வைகுந்தநாதன்.

(சி/54478)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் பாலசிங்கம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவில் கிழக்கு, சம்பியன் வீதியில் வசித்தவருமான சுப்பிரமணியம் பாலசிங்கம் 22.11.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் பாலநந்தன் (பிரான்ஸ்), பாலமுரளி, பாலகோபி (மருத்துவபீடம் - கொழும்பு), பாலகஜேந்தினி (தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.11.2007 வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சம்பியன் லேன்,
உதயசூரியன் லேன்,
கொக்குவில் கிழக்கு.
T.P.: 0777155822

தகவல்:
குடும்பத்தினர்.

(68283)

### திருமதி இராஜேஸ்வரி செல்லக்குமார் (சின்னமணி)



சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி (சின்னமணி) செல்லக்குமார்(அருள்) 19.11.2007 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் செல்லக்குமாரின்(அருள்) அன்பு மனைவியும், திரு. திருமதி சிவனடியார் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்தையா தம்பதியரின் அன்பு மருமகளும் சாந்தலட்சுமியின் அன்புத் தாயும் புஸ்பராணி (கொழும்பு), அமரர் மகாலிங்கம், யோகாம்பாள், இரத்தினசிங்கம் (வவுனியா), தனபாலு(கொழும்பு), அனுராதேவி, லோகநாயகி (லண்டன்), தங்கராசா(சுழிபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் உதயகுமார்(டோகா), சந்திரகுமார்(டோகா) ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2007)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் வவுனியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோயிலடி,
சுழிபுரம்.
T.P:0776080933
வவுனியா T.P:NO 077936019

தகவல்:
தங்கராசா(சகோதரன்),
உதயகுமார், சந்திரகுமார் (பெறாமகன்மார்),
சாந்தலட்சுமி (மகள்).

(68285)

### திருமதி நமசிவாயம் சிதம்பரம்மா

மீசாலை கிழக்கைச் சேர்ந்த திருமதி நமசிவாயம் சிதம்பரம்மா நேற்று (24.11.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சரஸ்வதி, வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் கார்த்திகேசு, யோகாம்பிகை, கமலாம்பிகை, சாம்பசிவம் (ஆஸ்திரேலியா), சிவயோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சரஸ்வதி, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, அண்ணாமலை, சறோஜினி (ஆஸ்திரேலியா), ராஜினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், மஞ்சுளா, ஜமுனா, இளங்கோ, நர்மதா, ஜேகதீசன், உமாஜெயந்தி, சுதேசன், அஜந்தி, கௌரி, சிற்சபேசன், மயூரன், மைதிலி, அருணா, அபிராமி, நித்தியா, விக்ரம், தக்ஷி, கணன், திவ்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2007) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அல்லாரை கொற்புலவு இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
கணபதிப்பிள்ளை யோகாம்பிகை (மகள்),
ஜெயராஜசிங்கம் உமாஜெயந்தி (பேர்த்தி)

(சி/54476)


## விற்பனைக்கு

Fancy பொருள்கள், Fittings, அலுமாரிகள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 162, நாவலர்வீதி, 021-4591184
சனி, ஞாயிறு கிழமைகளில் (4-6 வரை)


## தவறிவிட்டது

சந்தை வீதி, தெல்லிப்பழையைச் சேர்ந்த ராசமனோகரன் பிரபாகரன் என்பவருடைய தே.அ. அட்டை (753171142 V), வி.அ.அட்டை (0907010014) என்பன அடங்கிய பேர்ஸ் ஏழாலைக்கும் (ஸ்ரேசன் வீதி) கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்ரேசன் வீதி, கோண்டாவில் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தொலைபேசி : 021 4590791. (68287)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிக்கவரும் நாயை காவலாக மாற்றும் இலங்கை ஆட்சியாளரின் ராஜதந்திரம்!

1987ஆம் ஆண்டு நிகழ்ந்த இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் இருபதாவது ஆண்டுப் பூர்த்தியைத் தொடர்ந்து பலரும் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தனர். அவற்றுள் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் முன்னாள் மருமகன் கலாநிதி.குமார்ரூபசிங்க முன்வைத்த கருத்தொன்று இங்கு கவனத்திற்குரியது.



டி.எஸ்.சேனநாயக்க

அதாவது இனப்பிரச்சினைக்கான தீர்வு 1987ஆம் ஆண்டு செய்யப்பட்ட இலங்கை - இந்தியஒப்பந்தத்தை விடவும் மேல் நோக்கிச் செல்ல வேண்டியதாய் இருக்கையில் ராஜபக்ஷ தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள தீர்வோ 1960களை நோக்கி பின் நோக்கிச் சென்றுள்ள தீர்வாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்களத் தலைவர்கள், சிங்கள மக்கள், அவர்களது கருத்துலகம், அவர்களின் அணுகுமுறைகள் என்பன பிரச்சினையைப் புரிந்து கொள்வதற்கான ஒரு பெரும்பாதிப் பக்கமாகும். தமிழீழ மக்களின் தலைவிதியானது இப்பெரும் பாதிப் பக்கத்தை விளங்கிக் கொள்வதிலிருந்தும் அதற்கு ஈடுகொடுப்பது பற்றிய சிந்தனைகளிலிருந்தும் ஆரம்பிக்கப்படவேண்டியதாய் உள்ளது. ஒன்றை எப்படிப் பார்ப்பது என்பதிலிருந்தே அதை எப்படி அணுகுவது என்பது பிறக்கின்றது. ஆதலால் சிங்கள உயர்குழாத்தின் அரசியல்ப் பார்வையும் இராஜதந்திரப் பாதையும் இங்கு முக்கிய கவனத்திற்குரியவை. என்னத்திலிருந்து எதனைச் செய்யலாம் என்பதுதான் அரசியற் குறிக்கோளின் அகரவரிசையே தவிர, மனோரம்மீய விருப்பங்களோ; கற்பனைக் கனவுகளோ அல்ல. சிங்கள உயர்குழாம் தனது அரசியல் அபிலாசைகளை இலங்கையின் வரலாற்று அரசியற் சூழலுக்குள் கருத்தரித்துப் பிரசவிக்கின்றது. இருப்பதையே பல படிகளால் குறைத்துவிட்டு, நீண்ட பிரயத்தனங்களின் பின்பு குறைத்ததில் ஒருபடி கூட்டினால் அதுவே ஒரு வளர்ச்சி போலவும், பெரும் விட்டுக் கொடுப்புப் போலவும் தோன்றும். இது ஒரு மட்டரகத் தந்திரம். அப்படி ஒரு தந்திரம் சு.க.வின் தீர்வுத் திட்டத்தில் இருப்பது போலத் தோன்றுகின்றது.

பிரிட்டன் ஒரு சிறிய தீவு. அது தன்னை விடவும் நிலபலம், ஆட்பலம்மிக்க ஏனைய ஐரோப்பிய அரசுகளை எதிர்கொள்ள வேண்டிய சூழலில் இராஜதந்திரத்தை ஒரு முக்கிய ஆயுதமாய் வார்த்தெடுத்துக் கொண்டது. பிற்காலத்தில் அதன் இராஜதந்திர மரபுதான் அமெரிக்காவின் கருப்பைக்குள் குட்டி போட்டுப் பெருத்தது.

## இனப்பிரச்சினையை விளங்கிக்கொள்ள சிங்கள அரசியலின் இரத்த ஓட்டத்தை புரிந்துகொள்வது அவசியம்....

பிரமாண்டமான இந்தியாவிற்கு கீழேயுள்ள ஒரு குட்டித்தீவே இலங்கை. ஆதலால் சிங்கள உயர்குழாம் தனது அரசியல் அபிலாசைகளை இராஜதந்திரத் தொட்டிலில் வளர்த்தித் தாலாட்டிப் பாலூட்டும் கலையில் அதிகம் ஈடுபடலாயினர். சிறிய இலங்கைத் தீவிற்கான பெரிய ஆபத்து அருகில் உள்ள பெரிய இந்தியாவில் இருந்துதான் முதலில் வரமுடியும் என்பது ஒரு பாலகன் கூடத் தெரிந்திருக்கக்கூடிய உண்மை.

ஆனால் அந்தச் சிறிய இலங்கைத் தீவிலுள்ள சிங்கள ஆட்சியாளர்கள் 2500 ஆண்டுகளுக்கும் மேலாக அந்தப் பெரிய இந்தியாவைக் கையாண்டுவரும் விதம் வியப்பிற்குரியது என்ற அர்த்தத்தில் ஒருமுறை பேராசிரியர் ஒருவர் கருத்துத் தெரிவித்திருந்தமை இங்கு பெரிதும் கவனத்திற்குரியது.

இங்கு சிறப்பாகக் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் எந்தப்பெரிய இந்தியாவால் தமக்கு ஆபத்து என்று கருதினார்களோ அந்தப் பெரிய ஆபத்தான இந்தியாவின் வளங்களைப் பெற்று, பின்பு அந்த வளங்களையே தமது தற்பாதுகாப்பிற்கான ஆயுதங்களாக்கியும், அவ்வளங்களைத் தம்மயப்படுத்தியும் வாழ்ந்துவரும் 2500 ஆண்டுக்குக் குறையாத ஒருபண்பாட்டுத் தொடர்ச்சி அவர்களிடமுண்டு.

### தன்னைக் கடிக்கவரும் நாயை காவல் நாயாக மாற்றும் அரசியல் முதுசொம்

இந்தியாவிலிருந்து அசோகச் சக்கரவர்த்தி தனது ஆதிக்கத்தின் குறியீடாய் மஞ்சள் வஸ்திரத்தை அனுப்பியபோது அவ்வஸ்திரத்தை தம்கையில் எடுத்து தம்மயப்படுத்தி பின்பு அம்மஞ்சள் வஸ்திரத்தையே தமது அரசியல் ஆதிக்கத்திற்கான குறியீடாயும் தமது அனைத்துவித அரசியல் அபிலாசைகளுக்குமான முதுசெலும்பாயும் மாற்றி விட்டார்கள். தம்மீது ஆதிக்கம் புரியவந்த மஞ்சள் வஸ்திரத்தை காலகாலத்திற்கான தமது அரசியல் கவசமாக சிங்கள உயர்குழாம் மாற்றிவிட்டது. பௌத்தம் பிறந்த இந்தியாவில், பௌத்தம் ஒரு மதமாக உயிர்வாழ முடியாது அருகிவிட்டது. ஆனால் அங்கிருந்து இந்தியாவின் - அசோகனின் அரசியல் ஆதிக்கமாய் கொண்டுவரப்பட்ட பௌத்தம், இலங்கையில் சிங்கள உயர்குழாத்தின் அரசியல் சித்தாந்தமாய் உயிர்வாழ்கின்றது.

பௌத்தம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டமை பற்றி ஆராய்ச்சியாளர் சுசந்த குணதிலகா எழுதிய கருத்துக்கள் இங்கு கவனிக்கத்தக்கவை. "...பௌத்தம் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதால் இலங்கையில் இருந்த பிரபுத்துவ சமூக நிறுவனங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. மறுபக்கத்தில் பௌத்தம் இலங்கையில் நிலவிய ஆட்சியை சட்டபூர்வமாக ஏற்றுக்கொண்டதால் அந்நிறுவனங்களைப் பேணவே செய்தது. ஆகையினால் தூபராம கட்டிமுடிக்கப்பட்ட போது 'அரசவைப் பெண்களும், பிரபுக்களும், அமைச்சர்களும், நகர மாந்தர்களும், கிராம மக்களும் தமது காணிக்கைகளைக் கொண்டு வந்தனர்' (மகாவம்சம் xvii). நடைமுறையில் இருந்த சமூக அமைப்பு தொடர்வதற்கு மாத்திரமன்றி அது மேலும் வலுவடைவதற்கும் பௌத்தம் உதவியதென்பதை இது காட்டுகின்றது. உண்மையில் மதகுருமாரின் வதிவிடங்கள், விகாரைகள் கூட அவ்வவற்றின் சாதி, வர்க்கத் தொடர்புகளுக்கிணங்கவும் அவற்றின் சமூக அடிப்படைகளைப் பொறுத்தும் பெயரிடப்பட்டன. இவ்வாறு பிரபுத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த மதகுருமாருக்கு இஸ்ஸரசமனகவும், வைஷ்ய குலத்தைச் சேர்ந்தோருக்கு விஸ்ஸகிரி விகாரையும் அமைந்திருந்தன (மகாவம்சம் xx).

## காலாதிகாலமாக இந்தியாவையும் அவ்வாறே நடத்தும் 'கெட்டித்தனம்'

2250 ஆண்டுகளுக்கு முன்பு, தேவநம்பிய தீசன் சிங்கள உயர்குழாத்தினரிடம் விட்டுச் சென்ற அரசியல் முதுசம் என்னவெனில் தன்னைக் கடிக்கவரும் நாயையே எப்படித் தனது காவல் நாயாக மாற்றுவது என்ற வித்தையாகும்.

சிங்களக் கலாச்சாரத்தில் முக்கிய அம்சம் அந்நியத்தைத் தம்மயப்படுத்துவதாகும். கட்டடக் கலையை எடுத்தாலும் நாம் இத்தகைய தம்மயப்படுத்தலை காணலாம். கலையை எடுத்தாலும் இதனைக் காணலாம், நவீன திரைப்படத்துறையை எடுத்தாலும் இதனைக் காணலாம். இப்படி எதிரியையே தம்வயப்படுத்தி தம்மயமாக்கும் வரலாற்றை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தவர் தேவநம்பியதீசன் ஆவார்.

### அதிகாரப் போட்டியை வெறுமனே இனப்பகைமை என்ற கண்ணாடியால் பார்க்கமுடியாது

அரசியல் அதிகாரம் சுமுகமாகப் பங்கிடு செய்யப்படாதவிடத்து எத்தகைய இரத்த உறவேயாயினும் தந்தைக்கும் மகனுக்கும், அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையே வாளேந்தி தலை கொய்த கதைதான் வரலாற்றில் நிறையவே உள்ளன. இலங்கையில் சிங்கள மன்னர்களின் வரலாற்றிலும் இப்படிக் கதைகளை நாம் காணலாம். அதிகாரப் போட்டியானது இரத்த உறவு, இன, மத, மொழி போன்ற அனைத்தையும் கடந்து செயற்பட வல்லது. அவற்றை வெறுமனே "இனப் பகைமை" என்ற கண்ணாடிக்குள்ளால் பார்க்க முடியாது.

சிங்கள மன்னர்கள் தமிழ் அரசகுடும்பங்களுடன் திருமண உறவு கொண்டிருந்தமை இங்கு குறிப்பிட்டுக் கூறக் கூடியது. பாண்டிய அரச குடும்பங்களுடன் திருமண உறவைக் கொண்டிருந்தமை மட்டுமன்றி சோழ அரச குடும்பத்துடனும் அப்படித் தொடர்பிருந்தது. "விஜயபாகு மன்னன் தன் சொந்தச் சகோதரியை ஒரு பாண்டிய இளவரசனுக்கு மணமுடித்து வைத்தான். இதனைவிடக் கவனத்தை ஈர்க்கும் இன்னொரு செய்தி என்னவெனில், விஜயபாகு எந்தச் சோழ மன்னனை எதிர்த்து வெற்றி கொண்டானோ அந்தச் சோழ மன்னனாகிய முதலாம் குலோத்துங்க சோழனின் மகளைப் பின்னர் விஜயபாகுவின் மருமகன் (சகோதரியின் மகன்) மணமுடித்தமையாகும்" என்று முதுபெரும் வரலாற்று ஆசிரியரான பேராசிரியர் கா.இந்திரபாலா எழுதியுள்ளார். அப்போது தமிழ் - சிங்கள மன்னர்களுக்கிடையில் உண்மையாகவே இனத்துவேசப் [illegible] என்பதிருக்கவில்லை.

இலங்கையில் சோழப்படையைத் தோற்கடித்த வெற்றி வீரனாய்ப் பெரிதும் புகழப்படுபவர் விஜயபாகு. இம்மன்னர் வேளைக்காரப்படை எனப்படும் தென்னிந்தியப் படையை கூலிக்கு அமர்த்தியிருந்தான். அதே போல பௌத்த சங்கத்தாரும் தமது புனித தந்ததாதுக் கோயிலைப் பாதுகாக்க வேளைக்காரப்படையை அழைத்துள்ளனர்.

"விஜயபாகுவின் வலிமை மிகுந்த படைப் பிரிவுகளுள் ஒன்று வேளைக்காரப்படை. தென்னிந்தியாவிலிந்து கொண்டு வரப்பட்ட போராளிகளை உள்ளடக்கிய இப்படை வணிக கணங்கள் மூலமாக திரப்பட்டது என்று கருத இடமுண்டு" என்று கூறும் பேராசிரியர்.கா.இந்திரபாலா மேலும் கூறுகையில் "விஜயபாகு இறந்த போது நிலவிய அரசியல் நெருக்கடியால் மிக முக்கியமான பௌத்த நிறுவனமாகிய தந்ததாதுக் கோயிலுக்கு ஆபத்து நேரிடக்கூடிய சூழ்நிலை காணப்பட்டது. அந்நிலையில் பௌத்த சங்கத்தார் வேளைக் காரப்படையினரை அழைத்து, தந்ததாதுக் கோயிலைப் பாதுகாக்கும்படி அவர்களிடம் கேட்டுக் கொண்டனர்".

### அரசியல் வியூகம் இயல்பான ஆயுதம்

இந்திய உபகண்டச் சூழலில் ஒரு சிறிய தீவாய் இலங்கை இருந்த பின்னணியில் காணப்பட்ட வம்சப் போட்டிகளின் நிமித்தம் இலங்கையில் காணப்பட்ட சிங்களத் தலைவர்களிடம் அரசியல் வியூகம் ஒரு இயல்பான ஆயுதமாக வளர முடிந்தது. அதிகாரச் சதுரங்கத்தின் பொருட்டு சோழ வம்சத்தவர்க்கு எதிராக பாண்டிய வம்சத்தவருடன் வியூகம் அமைப்பது, சோழரைச் சாந்தப்படுத்த சோழ வம்சத்துடன் மண உறவு கொள்வது, வர்க்கத் தேவைக்காக சிங்கள - தமிழ் வம்சங்கள் திருமண உறவு கொள்வது என்பனவெல்லாம் வரலாற்றில் பொதுவாய் நிகழ்ந்து வந்தன. சிங்கள மன்னர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எப்போதும் அரசியல் வியூகத்திற்கே முதன்மை கொடுத்தார்கள்.

இனம் என்ற உணர்விற்கு அப்பால் தமது வர்க்கம், ஆதிக்கம் என்பனவற்றிற்கே முதன்மை கொடுத்து வர்க்கம், ஆதிக்கம் என்பனவற்றுக்காக காலத்திற்கும், சூழலிற்கும் பொருத்தமான வியூகத்தை அமைப்பதில் கவனம் செலுத்தினார்கள். அப்படியே ஆதிக்கத்திற்கான வியூகத்திற்கு மதம் தேவைப்பட்ட போது மதத்தையும், இனம் தேவைப்பட்ட போது இனத்தையும் கையிலெடுக்க முடியும். இனம் அல்லது மதம் என்பதை சிங்கள ஆட்சியாளர்கள் கையிலெடுத்தார்கள் என்றால் அது இனம் அல்லது மதம் என்ற நோக்கத்திற்காகவல்லாது ஆதிக்கத்திற்கான ஒரு வியூகம் என்ற நோக்கத்திற்காகவே ஆகும்.

"முரண்பாடுகளைக் கையாள்வது" பற்றிய ஒரு நுணுக்கமான வித்தைதான் இராஜதந்திரம் என்ற விளக்கத்தைக் கொண்டுள்ள சிங்களத் தலைவர்கள் தாம் வாழும் சூழலுக்கேற்ப அதில் தனிக்கவனம் செலுத்தத் தொடங்கினர் என்பதும் அவ்வாறே அதில் தனித் தேர்ச்சி பெறலாயினர் என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

கலிங்கத்திலிருந்து இளவரசனாய் இலங்கை வந்த பௌத்தனல்லாத நிஸங்கமல்லன் மேற்படி இலங்கையில் தனதுஆதிக்கத் தேவைக்காகப் பௌத்தனாக மதம் மாறி பௌத்தத்தின் காவலனாய் தன்னைப் பிரகடனம் செய்தமையை இங்கு உதாரணமாய் கூறலாம்.

இப்படிப் பிறப்பால் பௌத்தனுமல்லாத சிங்களவனும் அல்லாத நிஸங்கமல்லன் அரசியல் அதிகாரத்திற்கான கவசமாகவும் கேடயமாகவும் சிங்களத்தையும் பௌத்தத்தையும் கையில் எடுத்தான். இப்படி ஒரு இராஜதந்திர மரபு இலங்கையின் சூழலில் சிங்கள ஆட்சி அதிகாரத்தை பெற்ற உயர்குழாத்தின் மத்தியில் வளர்ந்து வந்தது. விருப்பங்களுக்கு வெளியே, பிறப்பிலேயே "வரம் பெற்றவர்கள்" என்று அல்லாமல், இலங்கையில் விசேட வரலாற்றுச் சூழல் என்னும் கருப்பைக்குள் அரசியல் ஆதிக்கத்திற்கான இராஜதந்திரம் சிங்கள ஆளும்வர்க்க உயர்குழாத்திடம் வளரத் தொடங்கியது. ஒரு சிங்கள - பௌத்தன் அல்லாத, அதுவும் வெளியில் இருந்து வந்த நிஸங்கமல்லன் தனக்கிருந்த தென்னிந்திய அரச வம்சங்களின் சவாலை எதிர்கொள்வதற்கு தன்னை சிங்கள - பௌத்த வாதத்தினால் அரண் அமைத்தான்.

### சிங்களஅரசியல் தலைவர்கள் வரம்பெற வணங்குவது கதிர்காம முருகனையே

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா உட்பட பொதுவாக சிங்களத் தலைவர்கள் வரம்பெற வணங்கும் கடவுள் இந்துக்கடவுளாகிய கதிர்காம முருகனையே ஆகும். பௌத்த மதத்தின் தோற்[illegible] புத்தர் ஒரு ஞானியே தவிர, கடவுள் அல்லர் என்பதே பௌத்தத்தின் போதனை. ஆதலால் சிங்களத் தலைவர்கள் வரம்பெற வணங்கும் கடவுளாக கதிர்காம முருகன் விளங்குகிறார். அதாவது சிங்கள - பௌத்த இனவாதத்தின் காவலனாகவும், துட்டகாமினியின் வாரிசாகவும் தன்னைக் காட்டிக் கொள்ளும் மகிந்த ராஜபக்ச இப்படி ஒரு முருக பக்தனாய் அடிக்கடி கதிர்காமம் செல்வது வழக்கம். வரம்பெற முருகக் கடவுளிடமும் ஆதிக்கம் பெற சிங்கள - பௌத்தத் திடமும் சிங்களத் தலைவர்கள் சரணடைவது வழக்கம்.



பண்டாரநாயக்கா

இந்த வகையில் மகிந்த ராஜபக்சவிற்கு சிங்கள - பௌத்தம் அரசியல் ஆதிக்கத்திற்கான ஒரு கவசமும் ஈட்டியும்தான். அது தமிழ் மக்களின் உயிரைக் கொல்கின்ற, அவர்களின் வாழ்வைச் சின்னாபின்னப்படுத்துகின்ற, தமிழ் தேசியத் தனித்துவத்தை அழிக்கின்ற ஈட்டியாய் உள்ளது.

உலகிலேயேமிகநீண்ட வரலாற்றைக் கொண்டதும் அமைப்பு ரீதியான ஒழுங்கமைப்பைப் பெற்றதுமான முதலாவது நிறுவனம் இலங்கையிலுள்ள பௌத்த மகாசங்கமாகும். சுமார் 2250 ஆண்டுகாலதொடர்வரலாற்றைக்கொண்ட இந்நிறுவனம் இலங்கையின் அரசியல் சிந்தனை மரபை [illegible] இணைத்து பேணி வருகின்றது. [illegible] தலையிற் காய்ச்சி உருக்கேறிய இரும்பாய் போன அப்பழுத்த சிங்கள இராஜதந்திரத்தை மகாசங்கம், காலத் திற்குக் காலம் மன்னர்களுக்கோ அன்றி ஆட்சியாளர்களுக்கோ கடத்திவரும் மரபைக் கொண்டுள்ளது. இத்தகைய இராஜதந்திரப் பாரம்பரியம் அனைத்துச் சிங்கள ஆட்சியாளர்களுக்கும் பொதுவானது. ஆயினும், சில குறிப்பிடக் கூடிய தலைவர்களின் கைகளில் அது மேலும் சிறப்பான மெருகைப் பெறுகின்றது.

குடும்ப ஆதிக்கப் போட்டிக்கான சிங்கள அரசியலின் இரத்தோட்டத்தை விளங்கிக் கொள்ளாமல் இலங்கையின் இனப்பிரச்சினையை ஒரு போதும் புரிந்து கொள்ளவும் முடியாது கையாளவும் முடியாது.

"சுதந்திர" இலங்கையின் ஆரம்ப காலத்தில், பிரதானமாக சிங்கள உயர்குழாத்து ஆறு குடும்பங்கள் ஒன்று சேர்ந்து அரசியல் அதிகாரத்தை பங்கு போட்டன. அவையாவன: சேனநாயக்கா குடும்பம், பண்டாரநாயக்கா குடும்பம், றத்வத்த குடும்பம், கொத்தலாவெல குடும்பம், ஆட்டிக்கல குடும்பம், ராஜபக்ச குடும்பம் என்பனவாகும். ஆரம்பகாலத்தில் இச்சிங்கள உயர்குழாத்தின் உடனடி எதிரி இடதுசாரிகளாவர். இடதுசாரித் தலைவர்களுள் ஒருவரான கலாநிதி.என்.எம்.பெரேரா என்பவரே அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. கொம்யூனிசத்தை அழித்தொழிப்பதே தலையாய முதற்பணி என்று ஜோன் கொத்தலாவல கூறியிருந்தமையும் கவனிக்கத்தக்கது.

சிங்கள உயர்குழாத்துத் தலைவர்கள் தமிழரைத் தமது உடனடி எதிரியாய் கருதவில்லை. இடதுசாரிகளைத் தோற்கடிப்பதற்குத் தமிழ் தலைமையுடன் கூட்டுச்சேர வேண்டும் என்ற கருத்தையே ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அப்போதைய பிரதமரான டி.எஸ்.சேனநாயக்காவிடம்

மு.திருநாவுக்கரசு
அரசியல் ஆய்வாளர்

எடுத்துரைத்தார் என்பதும் கவனிக்கத்தக்கது. மேற்படி சிங்கள உயர்குழாத்துக் குடும்பங்கள் ஆறுக்கும் இடையே அதிகாரத்தை சுமுகமாகப் பங்கீடு செய்யும் விவகாரம் 1950களின் முற்பகுதியில் முடிவுக்குவரத் தொடங்கியது.

டி.எஸ்.சேனநாயக்காவிற்குப் பின் ஐ.தே.க. வில் இரண்டாம் நிலையில் இருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவிற்கே ஐ.தே.கவின் தலைமைப் பதவியும் நாட்டின் பிரதமர் பதவியும் என்றிருக்க வேண்டியதற்குப் பதிலாக சேனநாயக்கா குடும்பத்தவரான டி.எஸ்.சேனநாயக்காவின் மகன் டட்லி சேனநாயக்காவிற்கே அப்பதவிகள் கைமாறப்போகின்றன என்ற உண்மை தெரியவந்த சூழலில் குடும்ப ஆதிக்கப் போட்டியின் நிமித்தம் பண்டாரநாயக்கா 1951ஆம் ஆண்டு ஐ.தே.கவை விட்டு வெளியேறி சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஸ்தாபித்தார். இதில் பண்டாரநாயக்கா, ரத்வத்த, ராஜபக்ச குடும்பங்கள் மூன்றும் ஓரணியாகின. சேனநாயக்கா, கொத்தலாவல, ஆட்டிக்கல குடும்பங்கள் மாமன் மருமகன் கட்சியாய் ஓரணியில் நின்றன. சு.க. குடும்பத்தினர் "வளவுக்காரர்" என்ற பிரபுகள் குடும்பத்தவராய் அமைய ஐ.தே.க குடும்பத்தினர் வணிக வர்க்கத்தினராயும் அமைந்தனர். மேற்படி இருகுடும்ப அணியினரும் உயர்குழாத்தினராயினும் இரு வேறு வர்க்க அடித்தளத்தை கொண்டோராயும் அமைந்தனர். பண்டாரநாயக்கா குடும்பத்தினர் ஹொரகொல்ல வளவினர் என்றும் இராஜபக்ச குடும்பத்தினர் கிருவா பத்து வளவினர் என்றும் தமது நில பிரபுத்துவ முத்திரையை இன்றுவரை தொடர்ந்தும் பேணிக் கொள்பவர்களாயுண்டு. ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி பொன்னுத்துரை திருவருட்செல்வி

*(2ஆம் வட்டாரம், நயினாதீவு)*

ஜனனம் 24✱10✱1945

மரணம் 12✱12✱2000

*திதி: கார்த்திகை கார்தேய் பிரதமை (25.11.2007)*

எங்கள் அன்புத் தெய்வமே! அம்மா ஆண்டுகள் ஏழு கடந்ததம்மா
உம் துயரம் எம்மைவிட்டு நீங்கிடுமோ - அம்மாவே!
ஆண்டுகள் எத்தனை பல கடந்தாலும்
தாய் அன்பிற்கு நிகராகுமோ - அம்மாவே!
அம்மாவே! அன்னை நாகபூஷணியின் திருவடியில்
நினைவுத் தீபம் ஏற்றி வைப்போம்.

(68271)


*இல.44/16, மணல்தரை வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

என்றும் உங்கள் நினைவுடன்:
**பொ.ஸ்ரீபாலன்** (ஆசிரியர்).

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 06 04 1924

உதிர்வு 26 10 2007



## அமரர் நாகன் சுப்பையா

*திதி: பிரதமை (25.11.2007)*

மாடுண்டு கன்றுண்டு மக்கள் உண்டென்றும் மகிழந்திருந்த மனிதா!
விம்மி விம்மி அழுதா மனையாள் வீதியோடு நின்றுவிட்டாள்
சுமந்து வந்த சுற்றம் சுடலையோடு திரும்பிவிட்டார்
இப்போது உனக்கு பெயர் எங்கே பெரிய தனம் எங்கே
ஊர் எங்கே உறவு எங்கே நீ எரிந்துவிட்ட சாம்பல்.

உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

*இன்று(25.11.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

தில்லையம்பதி,
கோண்டாவில். (68272)

**குடும்பத்தினர்,**
**சு.முத்துலிங்கம்** (முத்தொழி -மகன்).

# நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி

2008ஆம் ஆண்டு சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கான

## மீள்கேள்வி அறிவித்தல்

01.11.2007ஆம் திகதிய உதயன், 31.10.2007ஆம் திகதிய தினக்குரல் பத்திரிகைகளில் செய்யப்பட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் மேற்படி கேள்விகள் பரிசீலனை செய்யப்பட்டு மீள்கேள்வி கோரப்படுகின்றது.

**மீள்கேள்வி அட்டவணை**

| இல. | சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள் | ஏற்று க்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா |
|---|---|---|
| | நல்லூர் உப அலுவலகம் | |
| 1 | திருநெல்வேலிச் சந்தை (துவிச்சக்க வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 4,743,690.00 |
| | வாகன தரிப்பிடக்கட்டணம் (பலாலி வீதி, ஆடியபாதம் வீதி, பாடசாலை வீதி) | 100,000.00 |
| 2 | திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல. I | 143,850.00 |
| 3 | திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல. II | 143,850.00 |
| | கொக்குவில் உப அலுவலகம் | |
| 1 | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச் சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 216,804.00 |
| 2 | கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 194,933.00 |
| 3 | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 168,680.00 |
| 4 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 301,350.00 |
| 5 | கோண்டாவில் ஸ்ரேசனடி மரக்கறிச் சந்தையும் மாட்டிறைச்சிக் கடையும் | 75,600.00 |
| 6 | கொக்குவில் உப அலுவலக இல.329, பலாலி வீதி, ஆட்டிறைச்சிக்கடை | 111,825.00 |

கேள்விப்படிவம் வழங்கப்படும் திகதி : 04.12.2007 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை

கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 05.12.2007 புதன்கிழமை முற்பகல் 10 மணிவரை

கேள்வி திறக்கும் திகதி: 05.12.2007 புதன்கிழமை பிற்பகல் 2 மணி

குத்தகை தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*நல்லூர் பிரதேச சபை,*
*திருநெல்வேலி.* (சி/54446)

**பொன்னையா வைரமுத்து,**
*செயலாளர், நல்லூர் பிரதேச சபை.*

# விற்பனைக்கு

NPHO... இல. கொண்ட LML - SELECT - II ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு.
தொடர்பு: T.P.No.: 021 222 5283
*197, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.* (68270)

# கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 29.11.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

**ராஜீவ்**
*நவாலி வீதி, ஆனைக்கோட்டை.* (68158)

# மணப்பெண் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த கனடா சிற்றிசன், 1962ஆம் ஆண்டு, இரண்டாம் தாரம், திரு வோண நட்சத்திற்கு அழகிய பெண் தேவை. 1967- கனடா எஞ்சினியர், 1964 - லண்டன் வெளிநாடு, உள்ளூர் குறிப்பு பல இருக்கின்றன.

**கிருஷ்ணா திருமண சேவை**
**T.சுப்பையா,** *செங்குந்த வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.* (68269)

# கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kg மேல் வளர்ச்சியடையக்கூடிய BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 26.11.2007 விநியோகிக்கப்படும்.

**ராஜீவ்,**
*நவாலி வீதி, ஆனைக்கோட்டை.* (68158)

# தவறிவிட்டது

பண்டத்தரிப்பு, பனிப்புலம் அம்மன் கோயிலடியைச் சேர்ந்த சிவஸ்ரீ பேரின்பநாதக் குருக்கள் இன்பராஜக்குருக்கள் என்பவரது தேசிய அ.அட்டை இல. 752514332V, விசேட அ.அட்டை இல. 0904018716, மோட்டார் சைக்கிள் வரி அனுமதிப்பத்திரம், இன்சூரன்ஸ், இராணுவ பதிவு அட்டை ஆகியன 19.11.2007 அன்று பனிப்புலம் முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கும் அளவெட்டி வடக்கு ஆதிவீரபத்திரர் ஆலயத்திற்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பண்டத்தரிப்பு எமது வீட்டு முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

T.P.No.: 077 3065879 அல்லது 077 9596818

# திருமண சேவை

✱ யா/இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977இல் பிறந்த சதயம் கிரகபாவம் 35, உதயத்தில் செவ்வாய், பிரபல தொழிலதிபருக்கு மணமகள் தேவை. வெகுவிரைவில் கொழும்பு வரவுள்ளார்.

✱ 1970இல் பிறந்த, 8இல் செவ்வாய், கிரகபாவம் 60, உத்தராடம் 2 பாதம், உயரம் 5'8", கனடாவில் கணக்காளருக்கு மணமகள் தேவை. தற்போது கொழும்பு வந்துள்ளார்.

R.VANY INTERNATIONAL MARRIAGE BUREAU
உடனடித் தொடர்புகளுக்கு:
**077 4047531 / 077 6184434**
GOVT. Regd (International)

*1)* யாழ்.கிளை - *138/3, வடக்கு வீதி, நல்லூர் கந்தசுவாமி கோயில், நல்லூர்.*
E.T.Rajan - 0779349998

*2)* வவுனியா அலுவலகம்: S.*சிந்து,*
T.P.No.: 0779776384

*3)* தலைமை அலுவலகம்: S.Ponnampalam, 211#, Liverpool Rd., London, (U.K.).
*கனடா* அலுவலகம்: P.Akilan, 212/1, Parliament Rd., Ontario, Canada.

(சி/54471)

# மரண அறிவித்தல்

## *கதிர்காமு கந்தசாமி*



கரவெட்டி, கிழவி தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் நுணாவில், 190ஆம் கட்டையடியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு கந்தசாமி அவர்கள் 24.11.2007 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கதிர்காமு - பாருவதி தம்பதியரின் மகனும் முத்தையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் லீலாவதியின் அன்புக் கணவரும் பேரின்பநாதன் (லண்டன்), ரங்கநாதன் (டென்மார்க்), கிருஷ்ணமேனன் (லண்டன்), மோகநாதன் (லண்டன்), விஜித்தா (லண்டன்), கவிதா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனும் வினோதினி (லண்டன்), சுமதினி (டென்மார்க்), இந்திராதேவி (லண்டன்), கல்பனா (லண்டன்), யோகேந்திரன் (லண்டன்), கர்ணன் (லண்டன்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2007) ஞாயிற்றுக்கிழமை அவரரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு காகதாமைப்பிட்டி மயானத் தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**மனைவி,**
**திருமதி ராஜினி தபாபரன்** (பேறாமகள்).
*190ஆம் கட்டை,*
*நுணாவில், சாவகச்சேரி.* (68276)

# மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்

## உலகவழாவிய ரீதியில் ஆலயம் பற்றிய இணையத்தள அங்குரார்ப்பண வைபவம்

காலம்: **இன்று (25.11.2007) ஞாயிற்றுக்கிழமை**
நேரம் : **பிற்பகல் 3 மணி**
இடம் : **மருதடி விநாயகர் ஆலய மண்டபம்**

நிகழ்ச்சி நிரல்

*மங்களவிளக்கேற்றல்*
*இறைவணக்கம்*
*ஆசியுரை:* ஆலய பிரதமகுரு **சிவஸ்ரீ ப.ஜெயக்குமாரக் குருக்கள்**
*வரவேற்புரை:* **திரு.சி.சுரேஸ்குமார்** *(செயலாளர், வழிபடுவோர் சங்கம்)*
*தலைமையுரை:* **திரு.சி.க. உதயசூரியர்** *(முகாமைத்துவ தர்மகர்த்தா - தர்மகர்த்தா சபை)*
★ இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்தல் -பிரதம விருந்தினர்
*பிரதம விருந்தினர் உரை:* செஞ்சொற் செல்வர் **திரு. ஆறுதிருமுருகன்** *(உபஅதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)*
*சிறப்புவிருந்தினர் உரை:* **திரு.இ.வசந்தசேனன்** J.P.U.M *(பதில் நீதிவான்)*
**திரு.க.சிவாஜி** *(அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)*
**திரு.நா.பாலகிருஷ்ணன்** *(உபஅதிபர், நவோதயக் கல்லூரி, மானிப்பாய்)*
*கௌரவ விருந்தினர் உரை:* **திருமதி ருபினி வரதலிங்கம்** *(பிரதேச செயலர், சண்டிலிப்பாய்)*
**திரு.மே.யோ.சாந்தசிலன்** *(செயலாளர், வலிதென்மேற்கு பிரதேசசபை)*
*நன்றியுரை:* **திரு.த.தர்பர்கரன்** *(வழிபடுவோர் சங்கம்)*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.* (68197)

**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கம்.**

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
## சின்னராசா சிவராசா (நாதன்)

மண்மகிழ மடியில் 13✱05✱1970

விண்மகிழ மடியில் 12✱10✱2007



**25.11.2007**

*எம் செல்வமே நாதா எங்கு சென்றாயடா!*
*எம் அன்புச் செல்வமே நாள்கள் நாற்பத்தைந்து ஓடிப்போனதோ!*
*ஆறுமோ எம் நெஞ்சம், அன்பின் அடைக்கலமாய்*
*பாசத்தின் உறைவிடமாய் ஆபத்திற்கு நல்லதோர் தோழனாய்*
*நம்முன் நீ வாழ்ந்தாயே நாதனே!*
*எம் ஊரெங்கும் உன்குரல்தான் அதிகம் கேட்குமடா!*
*இன்று நீயின்றி அனைத்தும் வெறிச்சோடிக் கிடக்குதடா!*
*நாம் எல்லாம் ஒரு கூட்டுப் பறவைகளாய் வாழ்ந்தோம் அல்லவா?*
*இன்று நீ எமை விட்டு பறந்து சென்றது எங்கேயடா!*
*நாதனே உன் பெயரை மறக்கமுடியாதடா*
*நாம் வாழ்ந்திடும் காலமெல்லாம் உன் அன்பு முகத்தை மறப்போமா?*
*மீண்டும் ஒருமுறை எமக்குள் வந்து பிறந்திடமாட்டாயா?*
*கதறுதடா எம் நெஞ்சம் வலிக்குதடா எம் இதயம் நாதனே!*
*உனது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.*

(68181)

உனது பிரிவால் துயருறும்:
*அண்ணா* - **யோகேந்திரம்,** *மச்சாள்* - **விஜயராணி,**
*பிள்ளைகள்* - **விஜிகரன், யோகிதா, சுகிர்தன்.**
*இடைக்குறிச்சி மேற்கு, வரணி.*

# மரண அறிவித்தல்



## *இராசு வரதராஜா*

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர், பாதுகாப்பு உத்தியோகத்தர், சுந்தர்சன் மானிப்பாய்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி தெற்கு, மானிப்பாயைவசிப்பிடமாகவும் கொண்ட இராசு வரதராஜா 23.11.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசு- செல்லம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற மயில்வாகனம்-நாகம்மா தம்பதியரின் மருமகனும் சிவமலரின் (நோனா) அன்புக் கணவரும் வனஜா (தொழில்நுட்ப உத்தியோகத்தர்- ஹோமாகம), வனிதா (நூலகர், கல்வியற் கல்லூரி - வவுனியா), வதனா (3ஆம் வருடம், தாதியர் பயிற்சிக்கல்லூரி, யாழ்ப்பாணம்), வரதினி (2ஆம் வருடம் கல்வியற் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள்உதயன் (பொறியியலாளர், கொழும்பு) அவர்களின் மாமனும் காலஞ்சென்ற குலராஜா, நகுலேந்திரன் (கனடா) ஆகியோரின் சகோதரரும் திருமதி சிவபாக்கியம் நடராசா, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (25.11.2007) முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகப் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ரோஸ்பிரான்ட்" முன்பாக,*
*உடுவில் றோட், மானிப்பாய்.* (68273)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் ஆயத்தம்



ஒல்லியான - கம்பீரமான தோற்றம் கொண்ட அழகிய இளம்பெண்களுக்கான தேடல் சீனாவில் நடைபெற்றுவருகிறது. உடனேயே அழகிப் போட்டி நடைபெறுவதாக நினைத்துவிடக்கூடாது.

அந்நாட்டில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்காகத் தான் இந்தத் தேடல் நடைபெறுகிறது.

பீஜிங்கில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளின்போது பதக்கங்களை வழங்குவதற்கான பெண்களை தேர்வு செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

இதற்காக ஒல்லியாக, கம்பீரமான தோற்றம் கொண்ட பெண்கள் விண்ணப்பிக்குமாறு கேட்டுகொள்ளப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் பெண்கள் சராசரியாக 5 அடி 6 அங்குலம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பது உற்பட பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

பதக்கம் வழங்கும் நிகழ்ச்சியின்போது பங்கேற்பதோடு, தொடக்கவிழா மற்றும் நிறைவு விழா நிகழ்ச்சிகளுக்காகவும் இந்த அழகிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

# படிகளுக்கு 10 மடங்கு விலை



புகழ் பெற்ற ஈபிள் கோபுரத்தின் படியாக இருந்த ஒரு பகுதி எதிர்பார்த்ததைவிட 10 மடங்கு விலைக்கு ஏலம் போயிருக்கிறது. பிரான்சின் பாரிஸ் நகரில் உள்ள ஈபிள் கோபுரம் உலக புகழ்பெற்றது. இந்த கோபுரத்தில் படியாகப் பயன்டுத்தப்பட்ட படிகளின் ஒரு பகுதி சமீபத்தில் ஏலம் விடப்பட்டது.

இந்த படிகள் எதிர்பார்த்ததைவிட 10 மடங்கு அதிக விலைக்கு ஏலம் விடப்பட்டுள்ளன. நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று தொலைபேசி மூலமே இந்த படிகளை ஏலம் கேட்டிருக்கிறது. 1983ஆம் ஆண்டு ஈபிள் கோபுரம் சீரமைக்கப்பட்ட போது இந்த படிகள் அகற்றப்பட்டன.

## பலதும் பத்தும்

# கையெழுத்தில் தான் கல்வி



கையெழுத்து நன்றாக இருப்பது வெறும் அழகின் அடையாளம் மட்டுமல்ல என்று தெரியவந்துளளது. அமெரிக்காவை சேர்ந்த ஆய்வாளர்கள் கையெழுத்து தொடர்பான ஆய்வை மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில் கையெழுத்து நன்றாக இருக்கும் பிள்ளைகளை நன்றாகப் படிக்கும் விடயமும் தெரியவந்துள்ளது. இதன் காரணமாகவே ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் பிள்ளைகளின் கையெழுத்துச் சீராக இருக்க வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்துகின்றனர். அழகான கையெழுத்துள்ள பிள்ளைகள் நன்றாகப் படிப்பதோடு தங்களை வெளிப்படுத்திக் கொள்வதிலும் நிபுணர்களாக இருக்கின்றனர்.

# காளானைத் தேடி



தாய்லாந்தில் இராணுவ அமைச்சகம் வயல் வெளிக்கு நடுவே ஹெலிகொப்டருக்கு என்ன வேலை என்று விசாரணை ஒன்றை நடத்திவருகின்றது.

அந்நாட்டில் மேற்குப் பகுதியில் உள்ள வயல்வெளிக்கு நடுவே அண்மையில் இர்ாணுவ ஹெலிகொப்டர் வந்து இறங்கியது. ஹெலிகொப்டரில் இருந்த விமானி மற்றும் இதர இராணுவ வீரர்கள் வயல்வெளியில் எதையோ தேடி இருக்கின்றனர்.

விவசாயிகள் இதனால் வியப்பும், பீதியும் அடைந்து விசாரித்தபோது அந்த விமானி தனது தாய் வீட்டுக்கு வரும்போது காளான் கொண்டு வருமாறு தொலைபேசியில் கூறியதாகவும் அது கிடைக்கிறதா என்று வயலில் தேடிக் கொண்டிருப்பதாகவும் பதிலளித்திருக்கிறார்.

இந்த சம்பவம் பெரும் சர்ச்சையை கிளப்பி தனிப்பட்ட தேவைக்காக இப்படி ஹெலிகொப்டரை வயல் வெளியில் நிறுத்திக் காளான் தேடியது சரியா என்று விசாரணை நடைபெற்று வருகிறதாம்.

# எவரெஸ்ட் எங்கே?



எவரெஸ்ட் சிகரம் எங்கே இருக்கிறது என்ற கேள்விக்கு அது ஐரோப்பாவில் இருக்கிறது என்று பதிலளித்திருக்கிறார்களாம் பிரிட்டனில் உள்ள 33 சதவீத மக்கள். பிரிட்டனில் தேசிய புவியியல் விழிப்புணர்வு வாரத்தையொட்டி சமீபத்தில் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது.

இந்த ஆய்வின் முடிவில்தான் எவரெஸ்ட் ஐரோப்பாவில் இருக்கிறது என்று மூன்றில் ஒரு பிரிட்டன்வாசிகள் கருதுவது தெரிய வந்திருக்கிறது. பிரிட்டனில் உள்ள பாதிக்கும் மேற்பட்டவர்களுக்கு உலகின் நீளமான நதி நைல் நதி என்று கூடத் தெரியவில்லையாம்.

# திருநெல்வேலி பொதுச் சந்தையின் இன்றைய நிலைமை

## வர்த்தகரும், பொதுமக்களும் எதிர்கொள்ளும் இடர்ப் பாடுகள் பலப்பல

திருநெல்வேலி பொதுச்சந்தையின் தற்போதைய நிலை பல்வேறு பிரிவினரையும் அதிருப்தி கொள்ளவைக்கிறது. வெயில் காலங்களில் சந்தையின் சுகாதாரமற்ற சூழலைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாதவர்களையும் தற்போது பெய்துவரும் பலத்த மழை நிலைமை குறித்து கவலை கொள்ளச் செய்



துள்ளது.

யாழ்.நகரப்பகுதிக்கு மட்டுமன்றி புறநகர் பகுதிகளிலும் உள்ள காய்கறி உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், நுகர்வோர் என எல்லா மக்களுக்கும் முக்கியமான ஓர் இடமாக விளங்கும் திருநெல்வேலிப் பொதுச்சந்தை சுகாதாரச் சீர்கேடும் நோய் பரப்பும் மையமுமாக



மாறிவருகிறது என பலரும் விமர்சிக்கிறார்கள்.

**நுழைவாயில்களில் சேறும் சகதியும்**

சந்தையின் நுழைவாயில்கள் அனைத்துமே சேறும் சகதியும் நிறைந்து காணப்படுகின்றன. குறிப்பாகக் கிழக்குப்புற நுழைவாயில் நடைபாதை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மழைநீர் தேங்கியும் சேறும் சகதியும் நிறைந்த இந்தப்பகுதி மக்கள் நடமாடமுடியாத நிலையில் உள்ளது. வெள்ளத்திலும் சேற்றிலும் தமது உற்பத்திப் பொருள்களை எடுத்துவரும் தோட்டச் செய்கையாளர்கள் வழுக்கி விழுந்தெழும்புவதைக் காணமுடிகிறது. காய்கறிவாங்க வரும் நுகர்வோருக்கும் இப்படியான சங்கடங்கள் இருக்கின்றன.

சந்தைக் கட்டடம் தவிர்ந்த கிழக்குப் பகுதியில் உள்ள வர்த்தகர்கள் சிறிய கொட்டகைகளிலேயே தமது பொருள்களைப் பரப்பியுள்ளனர். இருபுறமும் கடைகள் என்பதால் நடுப்பகுதியில் சிறிய அளவிலான நடைபாதை மட்டுமே உண்டு. மழை காரணமாகவும் மக்களின் நடமாட்டம் காரணமாகவும் சேற்று நீரும் சேறுமாகவுள்ள இந்த நடைபாதையிலும் சரி மீன்சந்தைப் பகுதியும் சரி சந்தைக்குச் செல்பவர்களும் வர்த்தகர்களும் பெரும் அசௌகரியப்பட நேர்கிறது.

நடைபாதையின் இந்த நிலைமையினால் சிறிய கொட்டில்களில் உள்ள வியாபாரிகள் தமது கடைகளுக்குப் பொருள் கொள்வனவுக்காக எவரும் வருகிறார்கள் இல்லை என கவலை தெரிவிக்கிறார்கள். அத்துடன் நடைபாதை நடக்க உகந்ததாக இல்லாமையால் தமது கடைகளில் பரப்பி வைத்திருக்கும் காய்கறிகளை மிதித்தபடி பொதுமக்கள் செல்வதாகவும் அவர்கள் மீது குறைப்படுகின்றார்கள். பொருள்களைக் கொள்வனவு செய்ய வருபவர்களும் தாங்கள் சேற்றில் மிதிக்கக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்களே தவிர இந்த வியாபாரிகள் பரப்பி வைத்திருக்கும் பொருள்களையிட்டு கவலைப்படுவதாக இல்லை.

**தார்போடும் ஏற்பாடு என்னவாயிற்று?**

இந்தப்பகுதியில் வாகனங்கள் நிறுத்தப்படுவதும் போக்குவரத்துக்கு இடையூறாகவே உள்ளது. சந்தையின் உட்புறம் தார்போடுவதற்காக முன்னர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகச் செய்திகள் வந்தன. எனினும் அந்த வேலைகள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை எனக் கூறும் தோட்டக்காரர் கோண்டாவிலைச் சேர்ந்த செல்லத்தம்பி அங்கும் சேற்றை வழித்துக் கொள்கிறார்கள். வேறு எந்த முன்னேற்றமும் இல்லை என்கிறார்.

பணம் ஒதுக்குகிறார்கள் எதுவுமே நடப்பதாக இல்லை. யாழ்.நகரில் இது ஒரு முக்கியமான சந்தை. மலசலகூடங்கள் கூடச் சீர்செய்யப்படுவதில்லை எனக் கூறுபவர் வியாபாரி சின்னத்துரை. இந்தச் சந்தையின் நிலை எவ்வளவு மோசமாக இருக்கிறது. கவனிப்புக்கள் கிடையாது, நகரச்சந்தையல்ல நரகச் சந்தை என்பது தரகுவியாபாரி கிண்ணியின் கருத்து.

**மலசலகூடம் துர்நாற்றம் வீசுகிறது**

பொதுமக்களும் வியாபாரிகளும் கூறுவது போன்று சந்தையின் நிலை மிகவும் மோசமாகவே உள்ளது. மலசலகூடப் பக்கம் தலைகாட்டவே முடியாது. அதனைப் பயன்படுத்துபவர்கள் உரிய முறையில் நீரடிப்பதில்லை. துர்நாற்றம் வீசுகிறது. காய்கறிகளின் கழிவுகளும் சந்தையின் பல்வேறு பகுதிகளிலும் சிதறிக் கிடக்கின்றன. துப்புரவுத் தொழிலாளர்கள் எப்போதாவது ஒரு தடவை வருவார்கள் எனக் கூறப்படுகிறது. குடிதண்ணீர் வசதிகளும் இல்லை.

சுற்றாடலில் உள்ள வீதிகளும் நீரில் மூழ்கிக்கிடப்பதால் வீதியோரக் கடைகளும் பாதிக்கப்படுவதாகக் கூறுகிறார்கள். வாழைக்குலைப்பகுதியின் முன்பக்கம் சேறும் கழிவுப் பொருள்களுமாகக் காணப்படுகின்றது. சந்தைக் கட்டடமும் சில பகுதிக் கூரைகளினால் மழை ஒழுக்குக்கு உள்ளாகின்றது. இதனால் கட்டடப்பகுதியிலும் மழைநீர் சிதறல்கள் ஏற்படுகின்றன.

ஒரு முக்கிய சந்தையின் நிலை இவ்வாறு சீரற்றிருப்பது எல்லோருக்கும் கவலை தருகின்றது. துப்புரவுப் பணியாளர்கள் தமது



பணிகளை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும். அதே போன்று அங்கு கடை வைத்திருப்பவர்களும் நுகர்வோரும் தமது சுகாதாரத்தைப் பேணுவதற்கான தமது பொறுப்புக்களில் இருந்து விலகி நிற்பது தவிர்க்கப்படவேண்டும்.

பிரதேச சபையும் சந்தைப் புனரமைப்புக்கென ஒதுக்கப்படும் நிதியின் ஊடாக தற்போதைய குறைகளையும் செயற்பாடுகளையும் துரிதப்படுத்த வேண்டும் என்பதே பொது மக்களின் விருப்பம். *

நம்பி


டெங்குக் காய்ச்சல்

டெங்குக் குருதிக் கசிவுக் காய்ச்சல் அனேகமாக 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் குழந்தைகளிலும், ஏற்கனவே வேறு வகை வைரஸ் கிருமியால் டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டவர்களுக்கும் ஏற்படுகிறது. இந்த நிலையின் போது, சாதாரண டெங்குக் காய்ச்சல் அறிகுறிகளுடன் மூக்கு, முரசிலிருந்து இரத்தம் கசிதல், மலத்துடன் இரத்தம் வெளியேறுவதால் மலம் கபில நிறமாகக் காணப்படுதல், வாந்தியுடன் இரத்தம் வெளியேறுதல் போன்ற அறிகுறிகள் காணப்படும். இதனால் குருதிப் பாய்பொருளினளவு அசாதாரணமாகக் குறைவடைவதால் டெங்கு அதிர்ச்சி நிலை ஏற்பட்டு மரணம் கூட சம்பவிக்கலாம். எனவே உடனடியாகவே தகுந்த மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

சுகாதாரத் திணைக்களம்

(அ/54392)

care

Disasters Emergency Committee


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

**Computer Typing** மற்றும் போட்டோ பிரதி தெரிந்தவர்களும், பழக விரும்புவர்களும் தேவை. (இருபாலாரும்)

**STR Multy Center**
45 A, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
021 222 5680
0777 570150 (68253)



## விற்பனைக்கு

புதிய Sony 21" T.V. (Model - 2199 Made in Japan, கறுப்பு நிறம்), புதிய Sony வீடியோ டெக், சிறிய டிஜிட்டல் வீடியோ கமரா, பிரப்பங் கதிரை செற், பாவித்த குளிர்சாதனப்பெட்டி, ரைப்பிறற்றர் (ஆங்கிலம்), வோசிங் மிஷின் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: A.G.செல்வம்,
107, டேவிற் றோட், யாழ்ப்பாணம்.
T.P.: 077 9769852 (சனி, ஞாயிறு பார்வையிடலாம்) (68174)


## மண மங்கல நல்வாழ்த்து




இன்று (25.11.2007) ஞாயிற்றுக்கிழமை தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் கோயில் திருமண மண்டபத்தில் திருமண பந்தத்தில் இணையும்

தம்பதியினரை இல்வாழ்வில் எல்லாச் செல்வங்களையும் பெற்று என்றும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்

ஆசிரிய நண்பர்கள்,
யாழ்.மத்திய கல்லூரி.

(68075)

## 33 ஆம் நாள் நினைவுகளுடன்...



திருமதி
**குமாரசாமி இராசேந்திரபூபதி**

மண் மகிழ 16.05.1925
எங்கள் மனம் நெகிழ 24.11.2007

அன்பின் இருப்பிடமாய் அவனியில் இருந்து
பண்பின் பிறப்பிடமாம் அன்பான பாட்டி
அகிலத்தை விட்டு அகன்றே சென்றாலும்
அழியாது உம் நினைவு எம்மைவிட்டு.

மகள் - மகேஸ்வரி,
பேரப்பிள்ளைகள் :
திரு.திருமதி பரமேஸ்வரன் (அநிய),
திரு.திருமதி சிவறூபன் (லண்டன்),
பூட்டப்பிள்ளைகள்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு.
தொ.பே.0777 5242095 (68152)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1972, கேட்டை நட்சத்திரம், கிரகபாவம் 27 1/2, உயரம் 5' 5'' சிவந்த மேனி G.C.E.A/L படித்த மணப்பெண்ணுக்கு அரச, தனியார், வெளிநாட்டு மணமகன் தேவை.

தொடர்புக்கு
MR.G.S.V.
T.P.021 222 3885
T.P.077 5834982
(68198)


## நன்றி நவிலல்

நான் கடுமையான நோயுற்று கடந்த ஆவணி மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 33 நாள்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் 4 ஆம் வாட்டில் இருந்த சமயம் எனது நோயைக் குணப்படுத்த வேண்டிய சகல சிகிச்சைகளையும் எனக்கு அளித்து, என்னைக் குணப்படுத்திய வைத்திய கலாநிதிகளையும், தாதிகளையும் நினைவு கூர்ந்து அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். அத்துடன் கொழும்பு வைத்திய சாலையுடன் ஒப்பிடும் பொழுது யாழ்.வைத்தியசாலையில் மிகத் தேவையான மருந்துகளுக்கும், வைத்திய உபகரணங்களுக்கும் பற்றாக்குறை நிலவும் இக்காலகட்டத்தில், தங்களது தன்னலமற்ற சேவையாலும், குறைந்ததைக் கொண்டு நிறைந்ததைச் செய்யப் பாடுபடும் அயராத உழைப்பாலும், நோயுற்ற மக்களை எவ்வித பேதமுமின்றி சிரித்த முகத்துடன் குணமாக்க விளையும் தங்கள் சேவையையும் பாராட்டுகிறேன்.

மேலும் வைத்தியசாலையில் என்னைப் பார்க்க வந்த, எனக்காகச் செபித்த, யாழ். ஆயர், குருக்கள், அருட்சகோதரிகளுக்கும் மற்றும் உறவினர் எனக்கு அறிமுகமானவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியுடன் கூடிய இறையருளையும் ஆசியையும் நிறைவாக வேண்டி நிற்கின்றேன்.

அருட்சகோதரி யசிந்தா
திருச்சிலுவைக் கன்னியர் மடம்.

(68200)


## நீரிழிவு நிவாரணி

சிறுகுறிஞ்சா (Gymnema) இலைப்பவுடர் குருதிக் குளுக்கோசையும் கொலஸ்ரோலையும் குறைக்கும். செயல் இழந்த இன்சுலின் தயாரிக்கும் B கலங்களை உயிர்ப்பிக்கும். இதன் பயனாக நீரிழிவைக் கட்டுப்படுத்துவதுடன் குணமாக்கும்.

வாழ்க்கைச் செலவைக் குறைக்க,
புதிய விலை- 100g ~~250~~ ரூபா 200/=

**BIO TEC**
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 4590907.
(67564)



## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
*19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.* (68105)



## விற்பனைக்கு

சிறுவர்க்காகிய நல்லநிலையில் உள்ள விளையாட்டுப் பொருள்கள் [T.V Game, பில்டிங்புளக்ஸ், செஸ்போர்ட்], வீட்டுப் பாவனைக்குரிய சிரமிக்ஸ் பொருள்கள் [பீங்கான் கோப்பை, கிளாஸ்வகைள்] மின்சார உபகரணங்கள், மரத்தளபாடங்கள், குசினிப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு P.T பாலன், இல.45, சிவகுருநாதன் வீதி யாழ்ப்பாணம். (68191)


## அந்தியேட்டி அழைப்பு



மண்ணில் 14★04★1923
விண்ணில் 26★10★2007

அமரர்
**வீரகத்திப்பிள்ளை கதிரேசு**
*(விடத்தற்பளை, மிருசுவில்)*

இன்று (25.11.2007) ஞாயிற்றுக்கிழமை, காலை 10 மணிக்கு அமரரின் இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


*விடத்தற்பளை,*
*மிருசுவில்.* (68268)

குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26 * 10 * 1970

மறைவு
05 * 12 * 2006



அமரர்
**மாணிக்கம் ஜெயராசா (ரதி)**

திதி: பிரதமை 25.11.2007 ஞாயிற்றுக்கிழமை

செய்தொழில் தெய்வம் என்று
ஓடி உழைத்து உயர்ந்த உத்தமரே!
கண்பட்டு உந்தன் பொன்மேனி
மண்பட்டு வீழ்ந்து மடிந்ததுவோ!

பிள்ளைகளே இருகண்கள் என்றீர்
என் வைத்தியரும் நீங்கள் என்றீர்
இன்று அப்பா என்றழைக்க நீங்கள் இல்லை
மறுபிறவியில் எம்மிடம் வந்திடுவீர்

ஆயிரம் உறவுகள் முயன்றனவே
அப்பா உயிரோ திரும்பவில்லை
நீங்கள் வாழ்வில் பாதிவழியும் போகவில்லை
அநியாயமாய் வாழ்வைப் பறித்தெடுத்து விட்டார்களே

வழிபடு தெய்வங்களை வேண்டிநாம் வணங்குவது
பல பிறவி எமக்கென்று பாரினில் கிடைத்தாலும்
எங்கள் வீட்டுத் தெய்வம்
என்றும் நீங்கள் தான் அப்பா!

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
**குடும்பத்தினர்.**

சாளம்பை, ரதிகடை,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.
(68182)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்துத் தமிழ்க் கவிதைத்துறைக்குப் புகழ் சேர்த்தவர் மதுரகவி இ.நாகராஜன். அவர் சிறந்த சிறுகதை எழுத்தாளருமாவார். இரண்டு சிறுகதைத் தொகுதி களை வெளியிட்டார். அவரது முதலாவது சிறு கதை ''மீளாத இரவு'' ஈழகேசரியில் வெளி வந்தது. ''நிறைநிலா'', ''சத்தியம் நிலைக்கும்'' என்ற சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டவர். கவிதைத் துறையில் துலங்கி மிளிர்ந்த நாகராஜன் 'குயில் வாழ்ந்த கூடு', 'நீதிக்கரங்கள்' ஆகிய இரண்டு காவியங்களைப் படைத்தவர். ''சிலம்பு சிரித்தது'' என்ற கவிதை நாடகமும் அவரது படைப்புகளில் ஒன்றாகும். சிறுவர் பாடல்களையும் நிறைய எழுதிக் குவித்தவர். நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டை ஒட்டி நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் பரிசு பெற்றவர்.

# வாழ்வளித்த விலங்கு

வெளியே ஒரே இருள். காரிருளின் ஆதிக்கத்தை உள்ளே நுழைய விடாமல் விரட்டிக் கொண்டிருந்தது அந்த ஒளி விளக்கு. என் இதயத்தைக் கவ்விய வேதனை இருளை மட்டும் அதனால் விலக்க முடியவில்லை.

முடிவற்ற சிந்தனை அலைகள் நெஞ்சக் கடல்மீது மிதந்தன. பல்கனிக்கு வெளியே தெரியும் தென்னஞ்சோலையை நோக்கினேன். உயர்ந்த அம்மரங்கள் இருளின் பிடியில் கரு உருவங்களாகத் தெரிந்தன. அந்தத் தோற்றத்தை அர்த்தமற்றுத் துழாவிக் கொண்டு நிலை குற்றி நின்றன எனது விழிகள். திடீரென வீசிய கருங்காற்று பல்கனியூடே வந்து எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்ததோடு மேசை மீது விழுந்து கிடந்த காகிதக் கற்றைகளையும் நிலத்தில் தள்ளியது. கையில் இருந்த தீப்பெட்டியினால் விளக்கைப் பொருத்தினேன். இருள் மண்டிய அவ்விடத்தில் ஒளி மீண்டது. நிலத்தில் வீழ்ந்த காகிதங்களை மேசை மீது வைக்கையில் எனது விழிகள் அந்தக் கலியாணப் பத்திரிகையில் மீண்டும் படர்ந்தன.

ஒருமுறையா, இருமுறையா? பன்முறைபடித்ததனால் நெட்டுருவாகி உள்ளத்தில் வேதனையைச் சூழ வைத்த அந்தப் பத்திரிகையை மீண்டும் ஒருமுறை வாசித்தேன்.

''நிகழும் 1956 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை பத்து மணியளவில் வரும் சிங்க லக்கின சுப முகூர்த்தத்தில் எனது ஏக புத்திரன் திருநிறை செல்வன் சந்திரனுக்கும் கண்டி கோமாளிவத்தைத் தோட்டத்தைச் சேர்ந்த சண்முகம் அவர்களின் புத்திரி சரஸ்வதிக்கும்...'' இதற்கு மேல் அதனை என்னால் வாசிக்க முடியவில்லை. இரும்புத் துண்டின் பளுவாக என் கைகளை உறுத்தியதால் தொடர்ந்து வாசிக்காது ஆசுவாசத்துடன் மேசை மீது வைத்துவிட்டேன்.

''எது கல்யாணப் பத்திரிகை என்கிறீர்? அதை இரும்புத்துண்டின் கனமென்று உவமானஞ் செய்கின்றீர்'' என்றெல்லாம் பலர் கேட்பது என் செவிகளிற் தெளிவாகக் கேட்கின்றது. அவர்களுக்கு என்னையும் எனது கடந்த கால வாழ்க்கை முறையையும் இலட்சிய தாகத்தையும் விவரிக்காத வரை உண்மை வெளிவராது.

* * *

''சந்திரன் ஒரு பைத்தியம்''

''இல்லை அவன் ஒரு பெண் பித்து''

அவனை நன்றாகக் கவனியுங்கள்! உடையைப் பார்த்தீர்களா? கசங்கிய ஜிப்பா, கசங்கிய வேட்டி, காடுபற்றிய சிகை, இராப்பகல் வித்தியாசமின்றிக் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் திரிகிறான். இதைத்தவிர வேறு என்ன அத்தாட்சி வேண்டும். அவன் ஒரு பைத்தியம் தானே.

இவை, சிலர் என்னையும் பைத்தியக்காரனையும் ஒப்பிட்டுக் கண்ட வாதம்.

''நிச்சயமாக; அவன் ஒரு பெண் பித்து! கண்ட கண்ட பெண்களையும் கவனிக்கிறான். கூறு குறிப்பாக அவர்களைப் பார்க்கிறான். அவனது தனியறையில் ஏராளம் பெண்களின் படங்களே மண்டிக் கிடக்கின்றன. இது ஒருவகைப் பெண் பித்துத் தானே.''

இது, முந்தியவர்களைப் பிந்தியவர்கள் எதிர்க்கும் பிரதிவாதம்.

அந்த வாதப்பிரதிவாதங்களுக்குக் காரணம்? நான் ஓர் சித்திரக் கலைஞனாக இருப்பது தான்.

நிலா மலர்ந்த இரவு, அந்திக் கடற்கரை, அழகு மலர்க்கா, இவற்றிடையே நேரம் தெரியாது அழுந்திக் கிடப்பவன் நான்.

அழகிய பெண்களையும் சிற்பங்களையும் கூர்ந்து கவனிப்பேன். அவற்றை எனது தூரிகையினாற் சித்திரமாக்கி தனியறையில் மாட்டியிருக்கிறேன்.

இந்த வெறியின் உந்தலில் எனது உடலையோ, சூழ்நிலையையோ நான் கவனிப்பதில்லை. நிலத்துள் புதைக்கப்பட்ட விதை கற்பாறைகளின் கடினத்தைக் கண்டு வேரோடாமல் விடுவதில்லை. எனது கலை வளர்ச்சியடைய வேண்டுமானால் சமூகத்தின் கண்மூடித்தனமான முடிவைக் கவனிக்க முடியுமா?

சமூகம் ஒன்றை நினைத்து விட்டதானால் தன்னுடைய எண்ணத்தைச் சாதித்துவிடப் பின் நிற்பதில்லை. எனது வாழ்வின் இலட்சியத்திற்கு இணைந்து சென்ற பெற்றோர்களின் இதயத்தில் வேதனைப் புயலைப் புகுத்திவிட்டார்கள். அதன் கலக்கலில் எழுந்த துர்நாற்றம் என்மீது மோதிப் படிந்தது. ''பிரம்மச்சாரி சத மர்கடம்'' அதாவது கலியாணமாகாத ஒரு வாலிபன் நூறு குரங்குகளுக்குச் சமம். உங்கள் மகனின் இந்நிலையைத் தவிர்க்க வேண்டுமானால் உடனடியாகக் கல்யாணம் செய்து வைக்கவும் என்று பெற்றோரின் வேதனையைத் தீர்க்கும் வழியையும் உபதேசித்தது சமூகம்.

இதனை நிறைவேற்ற அப்பா துடித்தார். சாம, பேத, தான தண்டமெனும் சகல உபாயங்களயும் கையாண்டு செயலிழந்தார்.

அம்மா மாத்திரம் ஓய்ந்து விடவில்லை. அவள் மௌனப் போராட்டம் ஆரம்பித்தாள். நான் தட்டிக் கழித்துக் கொண்டே வந்தேன். எனது உறுதி இறுக இறுக அவர்களின் வேதனை பெருகியது. அந்த அன்னையின் நெஞ்சக் குன்றிலிருந்து பிரவாகித்து வரும் சோக நதியை விழியிலிருந்து நிறுத்துவதற்கு ''உங்கள் எண்ணப்படி செய்யுங்கள்'' என்றேன்.

அதன் பலன்? அதுதான் இந்தக் கல்யாணப் பத்திரிகை. குற்றம் சுமத்தப்பட்டவனை நீதிமன்றத்துக்கு இழுத்துச் செல்லும் விலங்காக என் முன் விரிந்து கிடக்கிறது.

* * *

நீண்ட நேர சிந்தனைக்குப் பின் உறங்கி விட்டேன். ''சந்திரா! விடிந்து இவ்வளவு நேரமாகியும் தூக்கமா? எழுந்திரு இப்போது புறப்பட்டால்தானே இன்று மாலை ஆறு மணிக்காவதல் கண்டியை அடையலாம்'' என்ற அம்மாவின் குரல் என்னை விழிக்கச் செய்தது.

கண்ணாலும் மனதாலும் காணாத பெண் வீட்டுக்குச் செல்வதற்கு மோட்டார் வண்டிகள் இரண்டு சோடிக்கப்பட்டு வாசலில் நின்றன.

விளையாட்டுப் பொம்மைக்குப் பிள்ளைகள் அலங்காரம் செய்வது போன்று என் நண்பர்களில் இருவர் எனக்கு அலங்காரம் செய்தனர். புறப்படுகையில் ''அட சந்திரா! புதுமணப் பெண்ணுடன் வந்ததும் உனது இலட்சியம் எங்கே என்று பார்ப்போம்?'' எனக் கேலி செய்தான் ஒருவன். அவனைப் பார்த்து முறுவலித்தேன். எனது முறுவலை இன்பத்தின் கிளர்ச்சி என்று அவர்கள் கருதியிருக்கலாம். அவர்களுக்கு எங்கே தெரியும் அது துன்பத்தின் பிரதிபலிப்பென்று. அது என் இதயத்தை மூடும் திரையல்லவா?

வண்டிகள் ஓடிக் கொண்டிருந்தன. வீதியின் இருமருங்கிலும் இயற்கை தன்னை விந்தையாக அழகுபடுத்தியிருந்தாள். சாகப் போகிறவன் தான் விரும்பியதை அனுபவிக்கத் துடிப்பது போன்ற துடிப்பு என்னுட் புகுந்து பெருமூச்சாக கிளம்பி வெளிவந்தது.

மாலை ஆறு மணிக்கு பெண் வீட்டை அடைந்தோம். புது மாப்பிள்ளையையும் கூட்டத்தினரையும் வெகு விமரிசையாக வரவேற்றனர். கலையழகு சொட்டும் வகையிற் பந்தல் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கே பொருத்தப்பட்ட மின்சார வெளிச்சம் அழகுக்கு மெருகூட்டியது.

மாப்பிள்ளை வீட்டாரினை உபசரித்த பின்னர் சிரமபரிகாரத்துக்கு இடம் கொடுத்தனர். மாப்பிள்ளை என்ற வகையில் எனக்கொரு தனியறை கிடைத்தது.

* * *

தனிமையும் அமைதியும் வேண்டினேன். தனிமை கிடைத்தது. பிரயாணத்திலும் மற்றவர்களின் உரையாடலிலும் என்னை மறந்திருந்தேன். மீண்டும் தனிமையில் சுழன்றோடத் தொடங்கியது சிந்தனை.

வட்டத்தைச் சுற்றிச் செல்லும் செக்கு மாட்டைப் போல் மீண்டும் எனது எதிர்கால வாழ்வைச் சுற்றி அது வீறுநடை போட்டது. இந்தச் சிந்தனையின் சுழற்சியிலே புதிய சிக்கலானது உளி போல் இதயப் பாறையைக் குடைய ஆரம்பித்தது.

அந்த மணப் பெண் தன் உடைமைகளை எல்லாம் என்னிடம் ஒப்புவித்து இன்பத்தைக் கூறுபோட்டனுபவிக்கத் தானே வருகிறாள். சதா கலையென்று மதுவை மாந்தி வாழ்வின் புற இன்பங்களை மறந்து செல்லும் என் பார்வையில் அவள் தென்படுவாளா? அவளுக்குப் போதிய திருப்தியை என்னால் அளிக்க முடியுமா? அன்னை தந்தையின் திருப்திக்காக ''ஆம்'' என்று எனது குறிக்கோளைத் தளர்த்தினேனே தவிர இதயத்தை ஆக்கிரமித்த எல்லாவற்றையும் துறந்துவிடத் தயாரில்லை.

புதிய சிக்கலுடன் எனது கடமை எதுவென விளக்க வந்தது. அதைத் தட்டிக்கொண்டே உள்ளத்தில் நீக்கமற நிறைந்திருக்கும் கலைத்துவம். கெம்பி நீங்கியது. இந்தத் தனியறையில் இன்னுமிருப்பேனாயின் உண்மையில் நான் பைத்தியம் பிடித்தவனாகிவிடுவேன் என்ற உண்மை துலங்கவே எழுந்து வெளியேறினேன்.

அப்போது நேரம் இரண்டு மணியிருக்கும் அபரபட்சத் தேய்பிறையின் ஒளிக் கற்றைகள் உதிர்ந்து மலைநாட்டின் வனப்பில் களங்கம் காட்டிக்கொண்டிருந்தன. அந்தக் களங்கத்தில் தன்னை அழுது காட்ட முடியாத விதவையாக விளங்கினாள் மலைமங்கை.

திக்குத் திசை தெரியாது கால்கள் இழுக்கும் திசையில் நடந்து கொண்டிருந்தேன். ''சோசோ'' வென்று வீணை மீட்டிக் கொண்டு ஓடும் நதி நெடும் பாம்பின் தோல்போல மினுங்கிக் கொண்டிருந்தது.

சிறிது தூரம் சென்றிருப்பேன். குறுக்குப் பாதையொன்றின் வழியாக வந்த உருவம் ஒன்று என்முன்னே விடுக்கென வந்து நான் நோக்கிச் செல்லும் திசையிலேயே சென்றது. அதன் தோற்றத்திலிருந்து அது ஒரு பெண்தான் என்பது திட்டமாக எனக்குப் புலனாகியது. இந்த அகாலத்தில் ஒரு பெண்! எங்கு செல்கிறாள்? தனிமையில் அதுவும்....

நமக்கேன் வீண் கவலை? இல்லை அது யார்? எங்கே செல்கிறாள் என்பதையெல்லாம் அறிய வேண்டுமென்ற ஆவல் தலைதூக்கிற்று. ஆகவே அவளைத் தொடர்ந்தேன். அந்த ஆராய்ச்சி மேல் எனது இதயத்திற்கும் அமைதி கிடைக்கலாமல்லவா?

சிறிது தொலைவில் ஒரு வீடு தெரிந்தது. அந்த வீட்டுக்குச் செல்லும் பாதையில் அப்பெண் இறங்கினாள். நான் மறைந்து அவள் பின்னாலேயே சென்று கொண்டிருந்தேன்.

(10 ஆம் பக்கம் பார்க்க...)

# வயதுக்கு ஏற்ற உடல் பருமன் இல்லையா? காரணங்கள் பல உண்டு; மருத்துவ ஆலோசனை பெறுங்கள்

வினா 1-
சிக்குன்குனியாவால் ஏற்பட்ட நோவை மாற்றமுடியாதா?

விடை
சிக்குன்குனியா நோய் ஏற்படும்போது அது மூட்டுக்களைத் தாக்கும் சாத்தியம் அதிகமாக இருக்கிறது. இப்படித் தாக்கப்பட்டவர்கள் சிலருக்கு காய்ச்சல் குறைந்து சில நாள் களிலேயே மூட்டுநோவும் பூரண குணமடைகிறது.

சுகநலம்

சிலருக்கு மூட்டுநோ 3-12 மாதங்கள் வரை நீடித்துக் காணப்படும். இப்படிப்பட்டவர் நோ எதிர்ப்பு மருந்துகளை மேற்குறிப்பிட்ட காலத்திற்கு பாவித்தல் வேண்டும்.

மிக அரிதாக இந்த சிக்குன்குனியா நோய் தொடர்ச்சியான மொழிவாதத்தையும் ஏற்படுத்துகின்றது. அதற்கான மருந்தை வைத்திய ஆலோசனைக்கு அமைவாக தொடர்ந்து பாவிப்பதன் மூலம் நோவை குறைத்துக்கொள்ளலாம்.

வினா 2-எனது வயது 17. நான் ஒரு பெண். மூட்டுக்களில் நோ ஏற்படுதல், கைவிரல்கள், முழங்கால்கள், கைகள் என்பன அசைக்க முடியாது காணப்படல். திடீர் திடீர் என்று கைவிரல்கள் பாதம் நோவுடன் கூடிய வீக்கமாக காணப்படல். இதற்கான காரணம் யாது?

விடை நீங்கள் குறிப்பிட்ட குணங்குறிகளுடன் பார்க்கும்பொழுது உங்களுக்கு இருக்கும் நோய் ஒருவித மூட்டுவாதநோய் போல் தோன்றுகின்றது. இதில் பலவகையான நோய்கள் இருக்கின்றன. இதில் எந்த வகை யான மூட்டுவாதநோய் உங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது எனபதனை அறிந்துகொள்ள வேறு சில குணாதிசயங்கள் உள்ளனவா என அறிந்து கொள்ளுதல் அவசியம். ஆகவே நீங்கள் ஒரு வைத்தியரிடம் காண்பித்து உங்களுக்கு எந்த வகையான மூட்டுவாத நோய் இருக்கின்றது என்பதை அறிந்து, அதற்கு உகந்த மருந்துகளை பாவித்தல் வேண்டும்.

வினா 3-வயது 23 (ஆண்), எனது பிரசசினை என்ன வென்றால் வயதிற்கும் உடல் உயரத்திற்கும் ஏற்ற நிறை போதாது. நிறை 50kg. கடுமையான வேலை செய்கின்றேன். ஆனால் எனது மார்புகள் அகலவோ / கைநரம்புகள் இறுக்கமாகவோ காணப்படவில்லை. கடு மையான வேலை செய்தாலும் உடம்பு மெலிவடைந்து கொண்டே செல்கின்றது. என்னைப் பார்ப்பதற்கு சிறுபையன் போல் காணப்படுகின்றேன். சிலர் என் உடம்பை பார்த்து பித்த உடம்பு என்கின்றார்கள் / பரம்பரை உடலவாகு என்கின்றார்கள் / கணச்சூட்டு உடம்பு என்கிறார்கள். எனவே என் வயதிற்கேற்ப நிறை உருவாகுவதற்கும் உடல் கட்ட மைப்புகள் வளர்ச்சியடைவதற்கும் ஏதாவது வழி இருக்கின்றதா? பல மருத்துவ சிகிச்சைகள் மேற்கொணடும் பலனில்லை. இதனால் மன உளைச்சலிற்கு ஆளாகுகின்றேன். உடன் பதில் தரவும்?

வினா 4- எனக்கு வயது 26 (ஆண்), வயதிற்கு ஏற்ற உடல் பருமன் இல்லை. எனது நிறை 46kg எனது உடல் மெல்லியதாக உள்ளது. நான் வருடத்திற்கு நான்கு முறை பூச்சி மருந்து பாவிக்கின்றேன் காலையில் எனக்கு பத்து மணிக்கு பிற்பாடுதான் பசி ஏற்படுகிறது. காலையில் பால் தேனீர் குடிப்பதில்லை. வெறும் தேனீர் தான் குடிக்கின்றேன். எனது உடல் வயதிற்கு ஏற்ப தோற்றம்பெற மருத்துவ முறையில் அல்லது உணவு முறையில் சீர் செய்யலாமா என்பதை மருத்துவ ஆலோசனை மூலமாக எதிர்பார்க்கின்றேன்?

"மருத்துவ ஆலோசனை"
சமுதாய மருத்துவத்துறை,
மருத்துவ பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

விடை நீங்கள் இருவரும் உங்கள் உயரத்தைக் குறிப்பிடவில்லை. உயரத்தைத் தெரிந்து கொண்டால்தான் உங்கள் எடை உங்கள் உயரத்திற்கு உகந்ததா இல்லையா என்று சொல்லமுடியும். உடல் மெலிவாக இருப்பதற்கு பல காரணங்கள் உண்டு. முதலாவதாக பரம்பரை காரணமாக வந்த உடல் வாகு அல்லது நீங்கள் உண்ணும் உணவில் போசாக்கு குறைவு ஏற்பட்டாலும் மெலிவாக இருக்கலாம். நீங்கள் உண்ணும் உணவு சரியான முறையில் [illegible] பினும் உடல் மெலிவாக இருக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு வயிறு ஊதல், வலி, மற்றும் மலம் இறுக்கமில்லாமல் அதிக அளவில் நுரைத்துக் கொண்டு மணத்துடன் போதல், களைப்பு போன்ற அறிகுறிகள் காணப்படும்.

தைரொயிட் சுரப்பி அதிகமாக சுரப்பதால் கூட நீங்கள் மெலிவாக இருக்கலாம். ஆனால் இப்படிப்பட்டவர்களுக்கு அதிக பசி, நெஞ்சுப்படபடப்பு, பயம், அதிக வியர்வை திடீர் என்று நிறை குறைவு, கைநடுக்கம் போன்ற அறிகுறிகள் இருக்கும்.

சலரோகம் உள்ளவர்களும் உடல் மெலிவு இருக்கும். ஆனால் அவர்களுக்கு அதிக சலம் போதல், கடும்பசி, அதீத தாகம் போன்ற அறிகுறிகள் இருக்கும். இதைவிட வேறுபல காரணங்களும் உண்டு.

முதலாவது நபரின் உணவுமுறை சரியாக இல்லை என நினைக்கிறேன். ஆகவே நீங்கள் தற்போது உண்ணும் உணவுடன் மேலதிகமாக 1 cup (200ml) பால் அருந்துவதுடன் ஏதாவது சத்துள்ள உணவுகளை சேர்த்து குறிப்பாக இலகுவில் கிடைக்கக்கூடிய புரதச்சத்துள்ள கடலை, பயறு, உழுந்து மற்றும் சிறிய மீன் வகைகளை சேர்த்துக்கொண்டால் உங்கள் பிரச்சினைக்கு தீர்வு காணலாம்.

இரண்டாவது நபர் உடல் மெலிந்து கொண்டு போகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார். உண்மையில் உடல் எடை ஒரேயளவில் இருக்கின்றதாயின் பயப்படத்தேவையில்லை. ஆனால் குறைந்துகொண்டு போகின்றதாயின் மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம்.

சில ஆண்கள் 17 – 20 வயதிலேயே அவர்களுக்குரிய உடல் எடையை அடைந்து விடுவார்கள். ஆனால் சிலருக்கு 28 – 30 வயதில் தால் உடல் எடை கூடுகின்றது. ஆகவே உங்களுக்கு உடலில் வேறு பிரச்சினைகள் அல்லது மேற்குறிப்பிடப்பட்ட குணங்குறிகள் இல்லாவிட்டால் பயம்கொள்ளத்தேவை யில்லை.

வினா 5- நான் மிகவும் கட்டையாக உள்ளேன் நான என்ன செய்தால் உயரமாக வரமுடியும்?

விடை நீங்களும் உங்கள் வயது, உயரத்தைக் குறிப்பிடவில்லை. ஒருவர் குள்ளமாக இருந்தால் அதற்கு பல காரணங் கள் உண்டு. [illegible] உங்கள் தாய் அல்லது தந்தையர் அல்லது பேரன், பேத்தி யாராவது குள்ளமானவராக இருந்தால் பரம்பரை காரணமாக நீங்கள் குள்ளமானவராக இருக்கலாம். இல்லாவிட்டால் நீங்கள் பிறக்கும்போது குறைந்த நிறையுள்ளவராக இருந்தாலும் நீங்கள் குள்ளமானவராக இருக்கலாம். மேலும் போசாக்கு குறைவான உணவுகள் உண்பதாலும் நீங்கள் குள்ளமானவராக இருக்கலாம்.

மேற்குறிப்பிட்ட காரணங்கள் இல்லை எனில் உடலில் சுரக்கும் சுரப்பிகள் குறைவாக சுரப்பதால் உதாரணமாக தைரொயிட் சுரப்பி மற்றும் கபச்சுரப்பி சுரப்பு குறைவதாலும் உயரம் குறைவாக இருக்கும். ஆனால் மேற்குறிப்பிட்ட பிரச்சனை உள்ளவர்களுக்கு வேலை செய்ய விருப்பமின்மை, படிப்பதற்கு கஷ்டம், உடல் பருமன் போன்ற பிரச்சினைகளும் காணப்படும். மேலும் நீங்கள் மிகவும் சிறுவயதில் ஆஸ்துமா, மொழிவாதம் மற்றும் சிறுநீரக நோய்களை கட்டுப்படுத்துவதற்காக Prednisolone எனப்படும் மாத்திரைகளை அதிகமாக உட்கொண்டிருந்தாலும் உங்கள்

உங்கள் கேள்விகளுக்கு
மருத்துவ நிபுணர்கள்
பதில் தருகிறார்கள்

வளர்ச்சி பாதிக்கப்பட்டிருக்கலாம். இவற்றை விட வேறு காரணங்களும் உண்டு. ஆகவே பரமபரையில் உயரம் குறைவு அல்லது போசாக்கு குறைவான உணவு அல்லது பிறக்கும போது நிறை குறைவு இல்லாவிடில் வைத்தியரிடம் காண்பித்து அறிவுரை பெறவும்.

கீழ்கண்ட முகவரிக்கு கடித மூலமாகவோ, தொலைபேசி எண்ணுக்கு SMS மூலமாகவோ தொடர்புகொண்டு உங்கள் வினாக்களை பதிவு செய்யலாம். அத்துடன் அருகில் காணப்படும் சின்னத்துடன் எம்மால் நிறுவப்பட்டுள்ள வினா சேகரிப்பு பெட்டிகளில் உங்கள் வினாக்களை இடுவதன் மூலமும் அவை எம்மை அடைவதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். உங்கள் கேள்விகளும் பதில்களும் பிரதி ஞாயிறு தோறும் உங்கள் உதயனில் பிரசுரமாகும்.. (உங்கள் வினாக்களில் வயது, பால் என்பன கட்டாயம் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.)

மருத்துவ ஆலோசனை
மருத்துவபீடம்,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
T.P:0777 179268

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சமதை வருடி நெக்குருக்கும்

முதலாம் ஆண்டு நினைவுகள் 19 ஆம் மாத நினைவுகள்





மண்ணகம் மகிழ 12.03.1980 மண்ணகம் நெகிழ 05.12.2006

**குருநாதன் மதன்**

திதி:பிரதமை

மண்ணகம் மகிழ 29.10.1983 மண்ணகம் நெகிழ 23.04.2006

**குருநாதன் ஜெனார்த்தனன் (ஜனா)**

திதி:தசமி

ஊர்போற்று முத்தமரா யுலாவிவந்த சோதரரே!
உவகையுட னுமது பெற்றோர் நலம் மகிழ்ந்திடவே
உமதருமை புரியாதந்த கொடிய சண்டாளர்கள்
உமதுயிரை பறித்தனரே கொதிக்குது எம் நெஞ்சம்!

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.

இருபாலை. (68156) குடும்பத்தினர்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 • 06 • 1978

மறைவு 25 • 11 • 2003



**அமரர் இரத்தினேஸ்வரன் சுகுமார்**

(நிறஞ்சன்)

எம் குடும்பத்தின் குல விளக்கே நிறஞ்சா
எம் இதயமதில் விடிவு தந்த விடிவெள்ளியே!
உன்னை ஈன்றவள் அந்தோ பரிதவித்தாள்
உடன் பிறந்தோர் சிறகிழந்த அன்றிலானோம்
ஏனிந்த வேதனை! யார்செய்த சோதனை!
ஏதும் அறியோம்! இன்று உன்னைத் தேடுகின்றோம்!
இன்னும் உன் வரவுக்காய் கண்களில் கண்ணீருடன்
காத்திருக்கின்றோம்.

8 ஆம் வட்டாரம், மண்டைதீவு. (68142) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவுகளுடன்

மலர்வு
22★03★1917

உதிர்வு
27★10★2007



அன்பின் பிறப்பிடமாய்!
ஆசையின் உறைவிடமாய்
எமை ஈன்ற அன்னையே!
ஏணியாய் நின்று
எமை உயர்த்தினாய்.
உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

**திருமதி செல்லத்துரை சின்னம்மா**

(காலஞ்சென்ற புகையிரத நிலைய உத்தியோகத்தரின் மனைவி)

திதி: (25.11.2007)

நிரந்தர முகவரி:
ஸ்ரேசன் றோட்,
உரும்பிராய் மேற்கு.

தற்காலிக முகவரி:
68 1/2, ஜோசப் டயஸ் லேன்,
கொழும்பு - 15.

(68167)

## விற்பனைக்கு

நல் இன
காவலுக்குரிய
Doberman Pinscher
நாய்க்குட்டி
விற்பனைக்கு
உண்டு.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர். (68105)

## புறா விற்பனைக்கு

நல்லின கொண்
டைக்கறணம்,
சைனா குஞ்சுகள்,
லவ்பேட்ஸ்
கூட்டுடன் விற்
பனைக்கு உண்டு
93, கோவில் வீதி,
கைலாசபிள்ளையார்
கோவில் அருகில்.
சந்திக்கும் நேரம்:
காலை 9 மணிக்கு முன்
மாலை 5 மணிக்குப் பின்
திங்கள் முழுநாளும்.
(68171)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 24 ★ 08 ★ 1926

ஆண்டவன் அடியில் 14 ★ 12 ★ 2005



**அமரர் கந்தையா அரிராஜசிங்கம் (கோப்பாய்)**

(கணித ஆசிரியர், யா/இந்துக்கல்லூரி, பிரதி அதிபர் சோமஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர், பிரபல கணித நூலாசிரியர்)

திதி: 25.11.2007

நாங்கள் வைக்கும் ஒவ்வொரு காலடியிலும்
உங்கள் முகம் தெரிகிறதப்பா.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

15/1, GOMES PATH, Col - 04.

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.

(68252)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



திதி: 25.11.2007

தோற்றம்: 10★03★1933

மறைவு: 27★11★2004

அமரர்

**C.K. மகாதேவன்**

*(நவாலி - மானிப்பாய்)*

*(Manager - Jaffna Co-op)*

*நற்பண்புக்கோர் சிகரமாய்*
*பாசத்தின் உறைவிடமாய்*
*வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து*
*வழிகாட்டிய எம் குல விளக்கே!*
*மறையாது உங்கள் நினைவுகள்.*

2 ஆம் ஒழுங்கை,
உடுவில் வீதி, மானிப்பாய்.

குடும்பத்தினர்.
(68170)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



பிறப்பு
25 . 09 . 1948

இறப்பு
27 . 10 . 2007

**அமரர் ஏகாம்பரம் வேதாரணியம்**

*(ஓய்வுபெற்ற தபாலதிபர்)*

திதி: சர்வசித்து வருடம் கார்த்திகை மாதம் 25 ஆம் திகதி பிரதமை

பெற்று வளர்த்துப் பெருமை பெற வைத்தெம்மைக்
கற்றவர்கள் தாம் மதிக்கக் காலமெலாம் வைத்தவனே!
உற்றவர்கள் சுற்றம் உறவுகளைப் பேணிநிதம்
நற்குணத்து நாயகனாய் நாடறிய வாழ்ந்தவனே
நீ மறைந்து ஓடி மறைந்ததையா ஒரு மாதம்
உம்முடைய,
வாழ்வுச் சுவடுகளை வாழ்நாள் முழுவதும் நாம்
நீள நினைந்திருப்போம் - உன்
நினைவுகளில் வாழ்ந்திருப்போம்.

உங்கள் ஆன்மா சாந்தியுறப் பிரார்த்திக்கும்

11/1, தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி. குடும்பத்தினர்.

(68256)

## டுபாயில் வெற்றிடங்கள்
## யூ. ஏ. ஈ.- எம். பி. எம். கம்பனி

(உடனடிப் பயணம்)

| இல | தொழில் | தேவையானோர் | சம்பளம் |
|---|---|---|---|
| 01 | ஆண் சுத்திகரிப்பாளர் | 350 | டினார் 450/- |
| 02 | பெண் சுத்திகரிப்பாளர் | 400 | டினார் 500/- |

### விதிகளும் நிபந்தனைகளும்

இரண்டு வருட ஒப்பந்தம்; வேலை நேரங்கள், நாளொன்றுக்கு எட்ட(8) மணித்தியாலங்கள், வாரமென்றுக்கு 6 நாட்கள், இலவச தங்குமிடம், இலவச மருத்துவம், மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்த தன் பின்னர் தகுதிகாண் காலவரை 90 நாட்கள்.

வயதெல்லை 18-45 அனுபவமுள்ளவர்கள் / பயிலுனர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க்காணப்படும் முகவரிக்கு வரவும்.
3 வாரங்களுக்குள் பயணம்.
நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது
மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 7.00 மணிவரை
(ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

*உப முகவர்களும் விண்ணப்பிக்கலாம்


அராபியன் றோல் குறூப் (பிறைவேட்) லிமிடெட்
375, முதலாம் மாடி, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை
(டுப்பிளிக்கேஷன் ரோட்) கொழும்பு - 03.
தொலைபேசி :-2370653, 2502719
(டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இல. ஏஎல்/960/விளம்பரம்/03,05/07

மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி 011 2514803

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயகத்தில் காரைநகர்
பண்டிதர்தாழ்வைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்,
லண்டன் நீஸ்வரியில் வாழ்ந்தவருமான

அமரர்

**கனகசபை செல்வநாயகம்பிள்ளை**

அன்னை மடியில் 13.12.1928

ஆண்டவன் பிணைப்பில் 05.12.2006

திதி: 25.11.2007

*ஆண்டு ஒன்று போனாலும் ஆறாது எங்கள்*
*மனத் துயரம் நித்தமும் நெஞ்சில் சுமந்து இருக்கும்*
*உங்கள் நினைவலைகள் என்றென்றும் அழிவதில்லை!*
*உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல ஈழத்து*
*சிதம்பரத்தானை வேண்டுகின்றோம்.*

என்றும் உங்கள் நினைவில் வாழும்

பண்டாரக்குளம், பிள்ளையார் கோயிலடி,
நல்லூர்.

குடும்பத்தினர்.

(68160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒலிம்பிக் ஆயத்தம்

ஒல்லியான - கம்பீரமான தோற்றம் கொண்ட, அழகிய இளம்பெண்களுக்கான தேடல் சீனாவில் நடைபெற்றுவருகிறது. உடனே ஏதோ அழகிப் போட்டி நடைபெறுவதாக நினைத்துவிடக்கூடாது.

அந்நாட்டில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்காகத் தான் இந்தத் தேடல் நடைபெறுகிறது.

பீஜிங்கில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளின் போது பதக்கங்களை வழங்குவதற்கான பெண்களை தேர்வு செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

இதற்காக ஒல்லியாக, கம்பீரமான தோற்றம் கொண்ட பெண்கள் விண்ணப்பிக்குமாறு கேட்டுகொள்ளப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் பெண்கள் சராசரியாக 5 அடி 6 அங்குலம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பது உற்பட பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

பதக்கம் வழங்கும் நிகழ்ச்சியின்போது பங்கேற்பதோடு, தொடக்கவிழா மற்றும் நிறைவு விழா நிகழ்ச்சிகளுக்காகவும் இந்த அழகிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.



# படிகளுக்கு 10 மடங்கு விலை

புகழ் பெற்ற ஈபிள் கோபுரத்தின் படியாக இருந்த ஒரு பகுதி எதிர்பார்த்ததைவிட 10 மடங்கு விலைக்கு ஏலம் போயிருக்கிறது. பிரான்சின் பாரிஸ் நகரில் உள்ள ஈபிள் கோபுரம் உலக புகழ்பெற்றது. இந்த கோபுரத்தில் படியாகப் பயன்டுத்தப்பட்ட படிகளின் ஒரு பகுதி சமீபத்தில் ஏலம் விடப்பட்டது.

இந்த படிகள் எதிர்பார்த்ததைவிட 10 மடங்கு அதிக விலைக்கு ஏலம் விடப்பட்டுள்ளன. நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று தொலைபேசி மூலமே இந்த படிகளை ஏலம் கேட்டிருக்கிறது. 1983ஆம் ஆண்டு ஈபிள் கோபுரம் சீரமைக்கப்பட்ட போது இந்த படிகள் அகற்றப்பட்டன.

**பலதும் பத்தும்**

# கையெழுத்தில் தான் கல்வி



கையெழுத்து நன்றாக இருப்பது வெறும் அழகின் அடையாளம் மட்டுமல்ல என்று தெரியவந்துள்ளது. அமெரிக்காவை சேர்ந்த ஆய்வாளர்கள் கையெழுத்து தொடர்பான ஆய்வை மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில் கையெழுத்து நன்றாக இருக்கும் பிள்ளைகளை நன்றாகப் படிக்கும் விடயமும் தெரியவந்துள்ளது. இதன் காரணமாகவே ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் பிள்ளைகளின் கையெழுத்துச் சீராக இருக்க வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்துகின்றனர். அழகான கையெழுத்துள்ள பிள்ளைகள் நன்றாகப் படிப்பதோடு தங்களை வெளிப்படுத்திக் கொள்வதிலும் நிபுணர்களாக் இருக்கின்றனர்.

# காளானைத் தேடி

தாய்லாந்தில் இராணுவ அமைச்சகம் வயல் வெளிக்கு நடுவே ஹெலிகொப்டருக்கு என்ன வேலை என்று விசாரணை ஒன்றை நடத்திவருகின்றது.

அந்நாட்டில் மேற்குப் பகுதியில் உள்ள வயல்வெளிக்கு நடுவே அண்மையில் இராணுவ ஹெலிகொப்டர் வந்து இறங்கியது. ஹெலிகொப்டரில் இருந்த விமானி மற்றும் இதர இராணுவ வீரர்கள் வயல்வெளியில் எதையோ தேடி இருக்கின்றனர்.

விவசாயிகள் இதனால் வியப்பும், பீதியும் அடைந்து விசாரித்தபோது அந்த விமானி தனது தாய் வீட்டுக்கு வரும்போது காளான் கொண்டு வருமாறு தொலைபேசியில் கூறியதாகவும் அது கிடைக்கிறதா என்று வயலில் தேடிக் கொண்டிருப்பதாகவும் பதிலளித்திருக்கிறார்.

இந்த சம்பவம் பெரும் சர்ச்சையை கிளப்பி தனிப்பட்ட தேவைக்காக இப்படி ஹெலிகொப்டரை வயல் வெளியில் நிறுத்திக் காளான் தேடியது சரியா என்று விசாரணை நடைபெற்று வருகிறதாம்.



# எவரெஸ்ட் எங்கே?

எவரெஸ்ட் சிகரம் எங்கே இருக்கிறது என்ற கேள்விக்கு அது ஐரோப்பாவில் இருக்கிறது என்று பதிலளித்திருக்கிறார்களாம் பிரிட்டனில் உள்ள 33 சதவீத மக்கள். பிரிட்டனில் தேசிய புவியியல் விழிப்புணர்வு வாரத்தையொட்டி சமீபத்தில் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது.

இந்த ஆய்வின் முடிவில்தான் எவரெஸ்ட் ஐரோப்பாவில் இருக்கிறது என்று மூன்றில் ஒரு பிரிட்டன்வாசிகள் கருதுவது தெரிய வந்திருக்கிறது. பிரிட்டனில் உள்ள பாதிக்கும் மேற்பட்டவர்களுக்கு உலகின் நீளமான நதி நைல் நதி என்று கூடத் தெரியவில்லையாம்.



# திருநெல்வேலி பொதுச் சந்தையின் இன்றைய நிலைமை

## வர்த்தகரும், பொதுமக்களும் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் பலப்பல

திருநெல்வேலி பொதுச்சந்தையின் தற்போதைய நிலை பல்வேறு பிரிவினரையும் அதிருப்தி கொள்ளவைக்கிறது. வெயில் காலங்களில் சந்தையின் சுகாதாரமற்ற சூழலைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாதவர்களையும் தற்போது பெய்துவரும் பலத்த மழை நிலைமை குறித்து கவலை கொள்ளச் செய்துள்ளது.



யாழ்.நகரப்பகுதிக்கு மட்டுமன்றி புறநகர் பகுதிகளிலும் உள்ள காய்கறி உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், நுகர்வோர் என எல்லா மக்களுக்கும் முக்கியமான ஓர் இடமாக விளங்கும் திருநெல்வேலிப் பொதுச்சந்தை சுகாதாரச் சீர்கேடும் நோய் பரப்பும் மையமுமாக மாறிவருகிறது என பலரும் விமர்சிக்கிறார்கள்.



### நுழைவாயில்களில் சேறும் சகதியும்

சந்தையின் நுழைவாயில்கள் அனைத்துமே சேறும் சகதியும் நிறைந்து காணப்படுகின்றன. குறிப்பாகக் கிழக்குப்புற நுழைவாயில் நடைபாதை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மழைநீர் தேங்கியும் சேறும் சகதியும் நிறைந்த இந்தப்பகுதி மக்கள் நடமாடமுடியாத நிலையில் உள்ளது. வெள்ளத்திலும் சேற்றிலும் தமது உற்பத்திப் பொருள்களை எடுத்துவரும் தோட்டச் செய்கையாளர்கள் வழுக்கி விழுந்தெழும்புவதைக் காணமுடிகிறது. காய்கறிவாங்க வரும் நுகர்வோருக்கும் இப்படியான சங்கடங்கள் இருக்கின்றன.

சந்தைக் கட்டடம் தவிர்ந்த கிழக்குப் பகுதியில் உள்ள வர்த்தகர்கள் சிறிய கொட்டகைகளிலேயே தமது பொருள்களைப் பரப்பியுள்ளனர். இருபுறமும் கடைகள் என்பதால் நடுப்பகுதியில் சிறிய அளவிலான நடைபாதை மட்டுமே உண்டு. மழை காரணமாகவும் மக்களின் நடமாட்டம் காரணமாகவும் சேற்று நீரும் சேறுமாகவுள்ள இந்த நடைபாதையிலும் சரி மீன்சந்தைப் பகுதியும் சரி சந்தைக்குச் செல்பவர்களும் வர்த்தகர்களும் பெரும் அசௌகரியப்பட நேர்கிறது.

நடைபாதையின் இந்த நிலைமையினால் சிறிய கொட்டில்களில் உள்ள வியாபாரிகள் தமது கடைகளுக்குப் பொருள் கொள்வனவுக்காக எவரும் வருகிறார்கள் இல்லை என கவலை தெரிவிக்கிறார்கள். அத்துடன் நடைபாதை நடக்க உகந்ததாக இல்லாமையால் தமது கடைகளில் பரப்பி வைத்திருக்கும் காய்கறிகளை மிதித்தபடி பொதுமக்கள் செல்வதாகவும் அவர்கள் மீது குறைப்படுகின்றார்கள். பொருள்களைக் கொள்வனவு செய்ய வருபவர்களும் தாங்கள் சேற்றில் மிதிக்கக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்களே தவிர இந்த வியாபாரிகள் பரப்பி வைத்திருக்கும் பொருள்களையிட்டு கவலைப்படுவதாக இல்லை.

### தார்போடும் ஏற்பாடு என்னவாயிற்று?

இந்தப்பகுதியில் வாகனங்கள் நிறுத்தப்படுவதும் போக்குவரத்துக்கு இடையூறாகவே உள்ளது. சந்தையின் உட்புறம் தார்போடுவதற்காக முன்னர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகச் செய்திகள் வந்தன. எனினும் அந்த வேலைகள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை எனக் கூறுகிறார் கோண்டாவிலைச் சேர்ந்த செல்லத்தம்பி. அடிக்கடி சேற்றை வழித்துக் கொள்கிறார்கள். வேறு எந்த முன்னேற்றமும் இல்லை என்கிறார்.

பணம் ஒதுக்குகிறார்கள் எதுவுமே நடப்பதாக இல்லை. யாழ்.நகரில் இது ஒரு முக்கியமான சந்தை. மலசலகூடங்கள் கூடச் சீர்செய்யப்படுவதில்லை எனக் கூறுபவர் வியாபாரி சின்னத்துரை. இந்தச் சந்தையின் நிலை எவ்வளவு மோசமாக இருக்கிறது. கவனிப்புக்கள் கிடையாது, நகரச்சந்தையல்ல நரகச் சந்தை என்பது தரகுவியாபாரி கிண்ணியின் கருத்து.

### மலசலகூடம் துர்நாற்றம் வீசுகிறது

பொதுமக்களும் வியாபாரிகளும் கூறுவது போன்று சந்தையின் நிலை மிகவும் மோசமாகவே உள்ளது. மலசலகூடப் பக்கம் தலைகாட்டவே முடியாது. அதனைப் பயன்படுத்துபவர்கள் உரிய முறையில் நீரடிப்பதில்லை. துர்நாற்றம் வீசுகிறது. காய்கறிகளின் கழிவுகளும் சந்தையின் பல்வேறு பகுதிகளிலும் சிதறிக் கிடக்கின்றன. துப்புரவுத் தொழிலாளர்கள் எப்போதாவது ஒரு தடவை வருவார்கள் எனக் கூறப்படுகிறது. குடிதண்ணீர் வசதிகளும் இல்லை.

சுற்றாடலில் உள்ள வீதிகளும் நீரில் மூழ்கிக்கிடப்பதால் வீதியோரக் கடைகளும் பாதிக்கப்படுவதாகக் கூறுகிறார்கள். வாழைக்குலைப்பகுதியின் முன்பக்கம் சேறும் கழிவுப் பொருள்களுமாகக் காணப்படுகின்றது. சந்தைக் கட்டடமும் சில பகுதிக் கூரைகளினால் மழை ஒழுக்குக்கு உள்ளாகின்றது. இதனால் கட்டடப்பகுதியிலும் மழைநீர் சிதறல்கள் ஏற்படுகின்றன.

ஒரு முக்கிய சந்தையின் நிலை இவ்வாறு சீரற்றிருப்பது எல்லோருக்கும் கவலை தருகின்றது. துப்புரவுப் பணியாளர்கள் தமது



பணிகளை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும். அதே போன்று அங்கு கடை வைத்திருப்பவர்களும் நுகர்வோரும் தமது சுகாதாரத்தைப் பேணுவதற்கான தமது பொறுப்புக்களில் இருந்து விலகி நிற்பது தவிர்க்கப்படவேண்டும்.

பிரதேச சபையும் சந்தைப் புனரமைப்புக்கென ஒதுக்கப்படும் நிதியின் ஊடாக தற்போதைய குறைகளையும் செயற்பாடுகளையும் துரிதப்படுத்த வேண்டும் என்பதே பொதுமக்களின் விருப்பம். *

நம்பி

டெங்குக் காய்ச்சல்

டெங்குக் குருதிக் கசிவுக் காய்ச்சல் அனேகமாக 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் குழந்தைகளிலும், ஏற்கனவே வேறு வகை வைரஸ் கிருமியால் டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டவர்களுக்கும் ஏற்படுகிறது. இந்த நிலையின் போது,
சாதாரண டெங்குக் காய்ச்சல் அறிகுறிகளுடன் மூக்கு, முரசிலிருந்து இரத்தம் கசிதல், மலத்துடன் இரத்தம் வெளியேறுவதால் மலம் கபில நிறமாகக் காணப்படுதல், வாந்தியுடன் இரத்தம் வெளியேறுதல் போன்ற அறிகுறிகள் காணப்படும். இதனால் குருதிப் பாய்பொருளினளவு அசாதாரணமாகக் குறைவடைவதால் டெங்கு அதிர்ச்சி நிலை ஏற்பட்டு மரணம் கூட சம்பவிக்கலாம். எனவே உடனடியாகவே தகுந்த மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

சுகாதாரத் திணைக்களம்

(சி/54392)

care

Disasters Emergency Committee

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வழித்த விலங்கு.....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அகன்று வளைந்திருந்த சம்புப் பற்றைகளும் வளைவுகளும் பின்னால் வருபவரை முன்னால் செல்பவருக்குக் காட்டிக் கொடுக்காமலிருந்தன.

அந்தப் பெண் அதனுள் நுழைந்தாள். அது வீடல்ல. ஒரு கோவிலின் விக்கிரகத்து முன் தேங்காய் உடைக்கும் கல்லில் ஒரு வாலிபன் உட்கார்ந்திருந்தான்.

ஒட்டித் தாடி வளர்ந்து முதுமை தட்டிய வேஷமாகக் காட்சியளித்தது அவன் வதனம்.

நான் சுவர் மறைவில் மறைந்து கொண்டேன். உள் நுழைந்த பெண் பேசினாள்.

''குமார், என்னைப் பலி கொள்ளச் சந்திரன் என்பவன் வந்து முகாமிட்டு விட்டான். ஏற்கனவே நாம் திட்டமிட்டபடி எங்கள் காதற்செடி அரும்பிய நதிக்கரைக்குச் செல்வோம். அந்த அருவியிலேயே விழுந்து மறு பிறப்பிலே ஒன்று சேர்வோம்'' என்றாள் அப்பெண்.

என் தலை சுழன்றது. ஆயிரம் சம்மட்டிகள் கொண்டு என் தலையில் யாரோ தாக்குவதாக இருந்தது. என்முதுகிலே ஏற்றிவிடப்பட்டிருக்கும் இந்தப் பளுவா? எரிமலையாகமாறி நிற்கிறது. என் வாழ்வுக்கு விலங்கிட வந்த அவளுக்கு நான் விலங்கா? என்ன உலகமிது! சமூகம் ஒருவருக்கு மட்டுமல்ல எத்தனையோ பேருக்கு ஒன்றாக விலங்கிட்டுவிட்டது? மாறுபட்ட கருத்துடைய ஒவ்வொருவரையும் ஒன்றாக இணைத்து வாழ்வை ஒரே வரண்ட பாலைவனமாக்கி விடுவது தான் அதன் முடிவா?

பொங்கி வரும் உணர்ச்சிக் குமுறலுடன் கோவிலுக்குள் நுழைந்தேன். திட்டத்தை நிறைவேற்ற வெளிக் கிளம்பிய இருவரும் அடிபட்ட சிட்டுக்கள் போல் நடுங்கினர். நான் மெதுவாக குமாரின் தோளிற் கையை வைத்தேன். மின்சாரம் தாக்குண்டவன் போன்று பின்னடைந்தான். நான் சொன்னேன்.

''உங்கள் வாழ்க்கையை வேறுபடுத்திக் காதலைச் சாகடிக்க விரும்பாத சந்திரன் நான்தான்...'' சரஸ்வதி மயங்கி விழுந்தாள். குமார் ஓடிச் சென்று தண்ணீர் கொண்டு வந்து அவள் முகத்தில் தெளித்தான். அவளின் ஆயாசம் தீர்ந்தது. நான் தொடர்ந்தேன்.

''உங்கள் இருவர் வாழ்வுக்கு மட்டுமல்ல விருப்பமற்ற என்னை இசையச் செய்து இவ்விவாகத்தை ஒழுங்கு செய்கின்றனர். எல்லோரையும் தலையிட எண்ணினர். உங்களின் காதலின் புனிதத்தினால் விலங்கை உடைத்து விட்டீர்கள். நான் என்றுமே இதற்கு இசைந்தது கிடையாது. உங்களுக்கு வாழ்வும் எனக்கு இலட்சியமும் கிட்ட வேண்டும். அது தான் எனது பூரண விருப்பம். நீங்கள் அவசரத்தினால் எந்தத் துர்முடிவுக்கும் வரவேண்டாம். உங்கள் நல்வாழ்வுக்கு நான் வழி செய்கின்றேன்.'' என் சொற்கள் அவர்களுக்கு வாழும் நம்பிக்கை ஊட்டின. அவர்கள் இருவரின் முகங்களிலும் அமைதி நிலவியது. இனிமேல் தற்கொலை செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டானது.

* * *

உற்சாகமாக மறுநாள் விவாகத்துக்குச் செயல் புரிந்து கொண்டிருந்த அனைவரையும் நித்திராதேவி பற்றிக் கொண்டாள். எங்கும் மரண அமைதி. எனது அறைக்குள் சென்று இக்கடித்தை எழுதினேன்.

அன்புள்ள பெற்றோர்களே!

என் குறிக்கோளை எதிர்த்து சமூகம் தந்த போலி உபதேசத்தினால் என் வாழ்வுக்கு விலங்கிடவிருந்தீர்கள். அங்கே கொண்டு வந்த விலங்கு எனக்கு மட்டுமல்ல மணப்பெண்ணாக வரவிருந்த சரஸ்வதிக்கும், அவள் காதலன் குமார் என்று இளைஞனுக்கும் என்பதை நீங்கள் உணரத் தவறிவிட்டீர்கள். இன்றிரவு உண்மையை நான் நேரடியாக அறிந்த கொண்டேன். உங்கள் அன்புக்காக எனது இலட்சியப் பாதையினின்றும் நான் விலகி வழி நடக்கலாம். ஆனால் புனித அன்பினாற் பிணைக்கப்பட்ட இரு இளம் உள்ளங்களை நான் வெட்ட விரும்பவில்லை. நீங்கள் நாளை மணவீடு நடத்தி மகிழவே எண்ணியிருந்தீர்கள். நாளை இந்த மணவீடு பிண வீடாக மாறி அனைவருக்கும் தீராத அவமானம் ஏற்பட்டிருக்கும். அந்த மணவீடு மணவீடாக வேண்டும். எனது மனமும் மகிழ வேண்டும். அதுதான் என் பேரவா. நாளை வரவிருக்கும் சுப முகூர்த்தத்தில் சிறகொடிந்த பறவைகளாக துடித்துக்கொண்டிருக்கும் குமாருக்கும் சரஸ்வதிக்கும் வாழ்வளியுங்கள். நான் வருகிறேன். என்வரை வாழ்வு ஏகப்பரந்தவெளி. அந்தப் பரந்த வெளியில் நிம்மதியாக நான் உலவ முடியும். இயற்கையின் அமைதியிலேயே கலையைப் பற்றிய சிந்தனையில் இலயித்து இன்பம் நுகர்வேன். வெறுமனே வாழ்வைக் கழித்து விடுவேன் என்று நீங்கள் வருந்த வேண்டாம். காலதேவியின் அருளினால் எனக்கு வருமானமும் கிடைக்கும். என்னைப் பொறுத்து நீங்கள் கவலைப்பட வேண்டாம். தேர்ந்த பயிற்சியின் பின் தான் உண்மைக் கலைஞனாக முழு மனிதனாக வாழ்வேன்.

அன்பு,
சந்திரன்.

கடிதத்தை பார்வை தெரியுமிடத்தில் வைத்துவிட்டு வெளியேறினேன். கருமுகில்களுடன் தேய் நிலவு கண்ணாம் பூச்சி விளையாடிக் கொண்டிருந்தது. அந்த ஒளியோடு போட்டியிட்டுக் கொண்டு கீழ் கோடி யில் வெளுப்புத் துண்டு சுடர் விட்டது. அந்தச் சுடரை வரவேற்று வந்தனம் கூறச் சேவல் குரல் எடுத்தது.

நான் கண்டிப் புகைவண்டி நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தேன். அப்பப்பா! இந்த மலைப் பாதைகள் தாம் எத்துணை அபாயம் நிறைந்தவை. பல முடுக்குகள், திருப்பங்கள், பள்ளங்கள், மேடுகள், அனைத்தும் வந்து வந்து குறுக்கிட்டன. எனது உள்ளம் மட்டும் எங்கள் நாட்டு வீதி போல் நீண்டதாக இலட்சியக் கோடாக இருந்தது.

நின்று திரும்பிப் பார்த்தேன். மலை முகட்டில் அந்த மணவீட்டு ஒளி வெள்ளம் என்னைப் பார்த்து சிரிப்பது போலிருந்தது. பாவம் விடிந்து விட்டால் அது எதற்கோ! அதற்கெங்கே தெரியும்.!

(நன்றி - ஈழகேசரி).

## மக்கள் மாண்பு மக்கள் மாண்பு



செஸ் (சதுரங்க விளையாட்டு) விளையாட்டுகளைப் போல 'கோ பிறெய்ன் கேம்' (GOBRAIN GAME) என்ற புதிய விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.வைமன் வீதியை சேர்ந்த ஹரி கஸ்பரோ செஸ் அக்கடமி நிறுவனப் பணிப்பாளர் எஸ்.வித்தியாதரன் மேற்படி மூளைக்கான விளையாட்டினை முதன் முதலாக இலங்கையில் அறிமுகப்படுத்தி பாடசாலை மட்டத்தில் அறிமுகம் செய்து வருகின்றார்.

யாழ்.அல்லைப்பிட்டி தீவகப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த ஜீ.சி.ஈ.சாதாரண தர மாணவர்களுக்கு சர்வதேச தொண்டு நிறுவனம் மூலம் வழங்கிய விசேட நிபுணத்துவம் சம்பந்தமான பயிற்சி வழங்கும் போதே இவ் மூளைக்கான விளையாட்டுக் கோட்பாடு அறிமுகம் செய்யப்பட்டதாக ஹரி கஸ்பரோ நிறுவனப் பணிப்பாளர் எஸ்.வித்தியாதரன் தெரிவித்தார்.

அகில இலங்கை ரீதியில் தேசிய மட்டத்தில் செஸ் போட்டியில் சாதனை படைத்த எஸ்.வித்தியாதரன் 'செஸ்' சம்பந்தமான இரண்டு நூல்களையும் எழுதியுள்ளார்.

தற்போது கோ.பிறெய்ன் கேம் எனும் மூளைக்கான விளையாட்டு தற்போது அறிமுகம் செய்யப்பட்டு பிரபல பாடசாலை மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்படுகின்றது. மேற்படி விளையாட்டு தொடர்பாக அறிய ஆர்வம் உள்ளவர்கள் ஹரி கஸ்பரோ செஸ் அக்கடமி, இல.5, வைமன் வீதி, நல்லூர் எனும் விலாசத்திலோ அல்லது 021-222 8102 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளலாம்.

எஸ்.வித்தியாதரன் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி திணைக்கள பயிற்சி அதிகாரியாகவும் பணியாற்றி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.



வடமராட்சியைச் சேர்ந்த சுதந்திரசிகாமணி பிரியதர்சினி சர்வ தேச கணக்காளர் பரீட்சைகளில் திறமைச் சித்திகள் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் (The Institute Of Chartered Accountants Of Sri Lanka) பட்டயக் கணக்காளராக கடந்த ஓகஸ்ட் மாதம், 8 ஆம் திகதி பண்டாரநாய்க்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இவர் பிரகடனப்படுத்தப்பட்டார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் பந்துல குணவர்த்தன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதேவேளை, லண்டன் பட்டயக் கணக்காளர் சங்கத்தின் ( The Association Of Chartered Certified Accountants) பரீட்சையிலும் தேறிய நிலையில், அண்மையில் கொழும்பு சினமன் கிராண்ட், ஹோட்டலில் இடம்பெற்ற விசேட வைபவத்தில் அவருக்கான பட்டம் வழங்கப்பட்டது.

இந்தப் பட்டத்தை வழங்குவதற்காக லண்டன் அத்தாட்சிப் பத்திரம் பட்டயக் கணக்காளர் சங்கத்தின் ( The Association Of Chartered Certified Accountant[illegible] தலைவர் கில்போல் (Gill Ball) விசேடமாக இலங்கை வந்திருந்தார்.

மிக இளவயதில் இந்தப் பட்டயக் கணக்காளருக்கான பரீட்சையில் தேறி பட்டங்களைப் பெற்ற பிரியதர்சினி சுந்தரசிகாமணி வடமராட்சி, வல்வெட்டித்துறை அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவராவார்.

இவர் வல்வெட்டித்துறை ரோமன் கத்தோலிக்க பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் பாடசாலை, மற்றும் கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பழையமாணவியுமாவார்.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

# அமரர் செல்லப்பா இரத்தினம்

(அச்சுவேலி தெற்கு- ஓய்வுபெற்ற ஆசிரியரும், தர்சா தமிழ் பதிப்பக உரிமையாளரும்)

மலர்வு 16.02.1934 உதிர்வு 27.10.2007



எங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் பிறப்பிடமாய், வளர்ச்சிக்கும் முயற்சிக்கும் வழிகாட்டியாக வாழ்ந்து ஒளிச்சுடராய் திகழ்ந்த எங்கள் குடும்ப விளக்கின் உடலில் இருந்து உயிர்பிரிந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும், அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், வெளி நாடுகளில் வசிக்கும் எங்களின் இல்லங்களுக்கு நேரில் வந்தும், தொலைபேசி மூலமும் எமது துக்கத்தில் பங்கு கொண்டவர்களுக்கும். கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் பேருதவி புரிந்தவர்களுக்கும் இன்று நடைபெறும் ஆத்மா சாந்திப்பிரார்த்தனையிலும் அந்தி யேட்டியிலும் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறோம்.

அந்தியேட்டிக் கிரியைகள் 25.11.2007 காலை 10.00 மணிக்கு யாழ் வில்லூன்றி தீர்த்தக்கரையிலும். வீட்டுக் கிருத்தியம் 26.11:2007 திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு எமது இல்லத்திலும் (சத்தியபவனம் அச்சுவேலி) நடைபெறும். Tel: 0094777592570 (திருமதி.இரத்தினம்)

சுவிஸில்

01.12.2007 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில்
Hotel du soleil, 2800 Delemont, Tel:0329512508, 0795249585 (இ.சேகர், சத்தியாமகாலிங்கம்)

இலண்டனில்

4a, BedFord Road, Eastham London, E6 2NN. Tel: 02084715033(இ.பிரம்மன், இ.சிவதயாளன்)

இந்தியாவில்

இராமேஸ்வரம் புனித தீர்த்தக் கரையில் 25.11.2007 ஞாயிற்றுக் கிழமை காலை 11 மணியளவில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும். Tel: 00919942634282 (இ.தனுசன்)

இந்நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

'சத்தியபவனம்',
ஆஸ்பத்திரியடி,
அச்சுவேலி.
25.11.2007

தகவல்: மகன் சேகர் (சேகர் தமிழ்ப் பதிப்பகம், சுவிஸ்)

மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப் பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## பாரதம் கவனிக்க வேண்டிய பாக்.- இலங்கை உறவுநிலை

'இனம் இனத்தைச் சேரும்' என்பார்கள்.

பொது நல நாடுகள் அமைப்பு, பாகிஸ்தானை இடைநிறுத்தி எடுத்த முடிவு தொடர்பில் இலங்கை நடந்து கொண்ட விதம் இனம் இனத்தைச் சேரும் என்பதை உறுதிப்படுத்துவதாக அமைந்தது.

பாகிஸ்தானை இடைநிறுத்தும் முடிவு முதலில் பொதுநல நாடுகள் அமைப்பின் வெளிவிவகார அமைச்சர்கள் மட்ட செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மலேசியா, இலங்கை, பிரிட்டன், நியூகினி, லெஸோதோ, கனடா, தன்ஸானியா ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் பங்குபற்றினர். அங்கு பாகிஸ்தான் அரசின் போக்குக்கு எதிரான கருத்து நிலைப்பாடு சூடாக நிலவியது. அதனால் சர்வதேச சமூகத்தின் கருத்தியல் நிலைப்பாட்டுக்கு ஒத்துப் போக வேண்டிய கட்டாயத்தின் அடிப்படையில், அந்தக் கூட்டத்தின் தீர்மானத்துக்கு இசைவு தெரிவிக்க வேண்டியவரானார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் போகொல்லாகம. அது மட்டுமல்ல அத்தகைய ஒரு முடிவுக்கு அவர் இணங்கிய பின்னர் இலங்கை அரசுத் தலைமையின் சீற்றத்துக்கும் கடுப்புக்கும் கூட அவர் ஆளானார். அந்தப் பின்னணியில் கொழும்பு அரசின் அரசியல் நிர்வாக முறைமை பற்றிய ஆழமான ஓர் உண்மை புதைந்து கிடப்பதும் வெளிவெளியாகியிருக்கின்றது.

பாகிஸ்தான் விடயத்தில் இலங்கை அரசுத் தலைமையின் உள்ளக்கிடக்கையை - கருத்து நிலைப்பாட்டை - உண்மையிலேயே புரியாத நபராகவே இலங்கை வெளிவிவகார அமைச்சர் விளங்கினாரா என்ற கேள்வி இவ்விடயத்தின் நிகழ்வுப் போக்கை ஊன்றிக் கவனிப்பவர்களின் மனதில் எழுவது தவிர்க்க முடியாததே.

சார்க் பிரதேச நாடு ஒன்று தொடர்பாக அரசுத் தலைமையின் கருத்தைப் புரிந்து கொள்ள இயலாத - முடியாத - ஒருவரைத்தான் இலங்கை அரசு தனது வெளிவிவகார அமைச்சராக வைத்திருக்கின்றதா?

இந்தக் கேள்விக்கு விடையைத் தேடுவதற்கு முதலில் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான தற்போதைய நட்புறவு இறுக்கத்தின் பின்னணியையும் கொழும்பு அரசுக் கட்டமைப்பின் செயற்பாட்டுப் போக்கையும் நாம் அவதானிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

கொழும்பு அரசு 109 அமைச்சர்களுடன் பெரும் ஆரவாரப் பரிவாரங்களோடு ஆட்சியைத் தொடர்ந்தாலும், அதிகார மையம் ஏதோ ஒரு குறுகிய வட்டத்துக்குள் தான் புதைந்து கிடக்கின்றது என்பதையும், வெறும் கொடி, குடை, ஆலவட்டத்துடன் 'பந்தா' பண்ணுவதோடு அமைச்சர்களின் அதிகாரம் அடங்கி விட்டது என்பதையும் இப்பந்தியில் ஏற்கனவே தெளிவாக எடுத்து விளக்கியிருக்கின்றோம்.

இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் இலங்கை அரச அதிகாரத்தின் நாணயக் கயிறு, 'ராஜபக்ஷ சகோதரர்கள் அண்ட் கம்பனி' யின் கையிலேயே முற்றாக வீழ்ந்து விட்டது என்பதும் தெளிவு.

இதே சமயம், பாகிஸ்தானுடனான தற்போதைய நல்லுறவு இலங்கை இன யுத்தத்துடன் சம்பந்தப்பட்டே தற்போது இறுக்கமடைந்திருக்கின்றது. புலிகளுக்கு எதிரான இலங்கைப் படைகளின் யுத்தத்தில் இலங்கைத் தரப்புக்கு உதவும் பெரும் பின்னணிச் சக்தியாக பாகிஸ்தான் விளங்குகின்றது எனப் பொதுவாகக் கருதப்பட்டாலும் அது பற்றிய விடயங்கள் எல்லாம் பெரும் மூடு மந்திரமாகவே பேணப்படுகின்றன. 'ராஜபக்ஷ சகோதரர் அண்ட் கம்பனி'யால் நேரடியாகக் கையாளப்படும் இந்த இரகசிய செயற்பாடுகள் அனைத்தும் அரசும் கட்டமைப்பின் ஏனைய அங்கங்களுக்குத் தெரியாமல் அந்தரங்கமாகவே முன்னெடுக்கப்படுபவை.

பாகிஸ்தான் தொடர்பாக இலங்கை அரசுத் தலைமைக்கு இருக்கும் இந்த முக்கியத்துவம் - நெருக்கம் - இலங்கை அரசின் வெளிவிவகார அமைச்சருக்கோ கூட அறிய வராத பல ஆழமான விவகாரங்களையும் கொண்டது.

அதனால்தான் - விவகாரம் தெரியாத அப்பாவித் தனத்தில் செயற்பட்டு அரசுத் தலைமையின் கடும் சீற்றத்தையும் ஏச்சையும் வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறார் ரோஹித போகொல்லாகம

பொதுநல நாடுகள் அமைப்பு பாகிஸ்தானுக்கு எதிராக எடுத்த நடவடிக்கை தொடர்பில் கொழும்பு துள்ளிக் குதித்துச் சீறிச் செயற்பட்ட போக்கை முதலில் கவனிக்க வேண்டிய தரப்பு எது தெரியுமா? இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பரந்து விரிந்து கிடக்கும் இந்திய உபகண்டமேயாகும். இந்த இறுக்கமான நட்புறவின் ஆழத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் இந்தியா எடுக்கும் நிலைப்பாடு சம்பந்தமாக விசனம் தெரிவித்துவரும் ஈழத் தமிழ், ஆதரவு சக்திகள், ஓர் அம்சத்தை இந்தியாவுக்கும் திரும்பத் திரும்ப சுட்டிக்காட்டுவது வழமை. அவையே இப்போது நாமும் தொட்டுச் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்தப் பிராந்தியத்தில் - குறிப்பாக இலங்கையில் - தனது நேசசக்தி எது என்பதை அடையாளம் காண்பதில் இந்தியா தவறக்கூடாது என்பதே அது. அயல் நாடான இந்தியாவுக்கு உள்ளார்ந்தமாக நேச சக்தியாக இலங்கையில் விளங்கக் கூடியது சிங்களவர் தேசமா? அல்லது தமிழர் தேசியமா?

இக்கேள்விக்கு சரியான விடைகண்டு அந்த நேச சக்தியுடன் தனது உறவைப் பலப்படுத்தி அந்த நேச சக்தியை ஸ்திரப்படுத்துவதே இந்தியாவுக்கும் நல்லது இப்பிராந்தியத்துக்கும் நல்லது என்பது வெளிப்படை.

இந்து சமுத்திரப் பிராந்திய விவகாரத்தில் கொழும்பின் கடந்த காலப் போக்கை புதுடில்லி சரியான விமர்சனக் கண்ணோடு உற்று நோக்கி ஆராய்ந்து எடை போடுமாயின் இலங்கையில் தனது நேச சக்தி எது, நாசசக்தி எது என்பதை அது இலகுவில் உணர்ந்து கொள்ள முடியும்.

1971 ஆம் ஆண்டில் வங்கப்பிரச்சினை எழுந்த போது, மேற்குப் பாகிஸ்தானிலிருந்து விமானங்கள் இந்தியாவைக் கடந்து கிழக்குப் பாகிஸ்தானுக்குச் செல்வதற்கு இந்தியா தடை போட்டது. தடையை மீறி, பாரதத்தைச் சுற்றி வட்டமிட்டு மேற்குப் பாகிஸ்தானிலிருந்து விமானங்கள் கிழக்குப் பாகிஸ்தானுக்குப் பறந்தன. அப்படி அவை பறக்கும் போது கொழும்பில் தரித்து எரிபொருள் நிரப்பிக் கொள்ள இலங்கை அனுமதித்து ஒத்துழைத்தது. வங்கதேச விடுதலையை ஒட்டி இந்திய - பாகிஸ்தான் யுத்தம் வெடித்த சமயத்தில்அயல்நாடான இலங்கை இவ்வாறு பாகிஸ்தான் பக்கம் சாய்ந்து ஒத்துழைத்து உதவியது முதல் கொண்டு இப்போது பாகிஸ்தானுக்காக பொதுநல நாடுகள் அமைப்பில் அளவுக்கு மீறி குரல் எழுப்பியது வரை இஸ்லாமாபாத்துக்கும் கொழும்புக்கும் இடையில் உள்ள நட்புறவுப் பின்னலின் இறுக்கத்தையும் வலிமையையும் புதுடில்லி புரிந்து கொள்ள வேண்டும்.

அந்தப் புரிதல் ஏற்படுமானால் இப்பிராந்தியத்தில் தனது நேசசக்திகளை அடையாளம் காண்பதில் அவற்றுடன் இணைந்து செயற்படத் தீர்மானிப்பதிலும் இந்தியாவுக்கு சிக்கல் இருக்காது.

இனிமேலாவது புதுடில்லி தன்னை - தனது நிலைப்பாட்டை - சுய ஆய்வு செய்து நேர்சீர் செய்து கொள்ளுமா?

# அரசின் அனுசரணையுடன் கிழக்கில் துணைப் படைகள் காட்டுத்தர்பார்

## இரா. சம்பந்தன் குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 24

"கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் படையினரின் அதிகாரமும் அரச நிர்வாகமும் செயல் இழந்துவிட்டனவா? ஆயுதங்களுடன் திரியும் துணைப்படைகள் சட்டத்தையும் ஒழுங்கையும் கையில் எடுத்துக் கொண்டு காட்டுத் தர்பார் நடத்துகின்றன. அவற்றைத் தட்டிக் கேட்கும் தைரியம் அரசுக்கு இல்லை."

- இப்படிச் சாடுகின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இரா. சம்பந்தன் இப்படிக் கூறினார்.

செய்தியாளர் மாநாட்டில் இவ்விடயம் தொடர்பாக விளக்கம் அளித்த சம்பந்தன் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த 18 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டக் கூட்டமைப்பு உறுப்பினர் கனகசபையின் வீட்டிற்குச் சென்ற துணைப்படையினர் பொலிஸாரின் முன்னிலையிலேயே கனகசபையின் மருமகனைக் கடத்திச் சென்றனர்.

19 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்டத்தின் மீதான வாக்கெடுப்பு முடிந்த பின்னரே அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸாரின் முன்னிலையில் கடத்திச் சென்றவர்கள் கடத்தப்பட்டவரைப் பொலிஸாரிடமே மீள ஒப்படைத்துள்ளனர். இந்தப் பொலிஸார் கடத்தலில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யவோ அல்லது அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவோ முயலவில்லை.

இது ஏன்? அங்கே அரச படையினரும் பொலிஸாரும் செயல் இழந்து விட்டனர். துணைப்படையினரே ஆட்சி நடத்துகின்றனர். இந்த அரசின் அனுசரணையுடனேயே துணைப் படையினர் இவ்வாறு செயற்படுகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த ஓர் அரசியல் கட்சியினதும் ஜால்ராவாகச் செயற்படுவதில்லை. அப்படி செயற்படப் போவதுமில்லை.

தந்தை செல்வநாயகத்தின் காலம் முதல் நாம் சுதந்திரமாகவே செயற்படுகின்றோம். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளுக்காகவே போராட்டம் நடத்தி வருகின்றோம்.

சுயநிர்ணய - சுயாட்சிக் கொள்கையை அங்கீகரிக்கும் வகையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட 22 உறுப்பினர்களுடனேயே இந்தச் சபையில் இருக்கிறோம்.

**வரவு - செலவுத் திட்டத்தில் வெற்றி தோல்வி எமக்கு முக்கியமல்ல**

நாம் சுதந்திரமாக செயற்படுவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை பாதுகாக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்றில் சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமையை தடுக்கும் அதிகாரம் எவருக்கும் இல்லை.

வரவு - செலவுத்திட்டம் வெற்றி பெறுவதோ அல்லது தோற்கடிக்கப் படுவதோ எங்களுக்கு முக்கியமான விடயம் அல்ல; அதைப்பற்றிய அக்கறையும் எமக்கு இல்லை.

ஆனால் மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்திற்கு வந்து சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமையும், உறுப்பினர்களின் சிறப்புரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும்.

நாம் தமிழ் உறுப்பினர்களைப் பற்றி மட்டும் குறிப்பிடவில்லை. இந்தச்சபையில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கு சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமை ஊர்ஜிதப்படுத்தப்படவேண்டும் என்றே கோருகின்றோம். - என்றார் சம்பந்தன்.

எதிர்வரும் டிசம்பர் 14 ஆம் திகதி வரவு - செலவுத்திட்டத்தின் மூன்றாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பின்போது வரவு - செலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களிக்கத் தமது அமைப்புத் தீர்மானித்துள்ளது என்றும் சம்பந்தன் எம். பி. கூறினார். (சி)

## அல்வாய் வடக்கில் .கிரனேட் வீச்சு!

உடுப்பிட்டி,நவ.25

அல்வாய் வடக்கில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கிரனேட் வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது.

அல்வாய் வடக்கு, செல்லையா வீதியில் உள்ள ஒருவரது வீட்டை நோக்கி வீசப்பட்ட 'கிரனேட்' முற்றத்தில் வீழ்ந்து வெடித்தது.

வீட்டில் எவரும் இல்லாத வேளை இத்தாக்குதல் நடத்தப்பட்டதால் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1-155)

## ஈழவேந்தன் நாடு திரும்பியதும் அவரிடம் விளக்கம் கோரப்படும்

கொழும்பு, நவ. 25.

வரவு-செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிப்பதற்காக அனைத்துத் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி.க்களையும் கடந்த 19ஆம் திகதி நாடாளுமன்றில் பிரசன்னமாகியிருக்கும் படி கட்சியின் கொறடாவால் பணிக்கப்பட்டிருந்தது. ஆனாலும், அன்றைய தினம் ஈழவேந்தன் எம்.பி. சபைக்கு சமுகம் தரவில்லை.

இது குறித்து அவரிடம் கட்சி விளக்கம் கோரும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

"வரவு-செலவுத் திட்டத்தின் உரை மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளும்படிஅனைத்து எம்.பி.க்களுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்திருந்தது. இந்த அழைப்பின் பேரில் வெளிநாடுகளில் இருந்த கூட்டமைப்பு உறுப்பினர்கள் வந்து வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர். ஆனால், ஈழவேந்தன் எம்.பி. மட்டும் வரவில்லை. கட்சியின் அழைப்பை உதாசீனப்படுத்தியுள்ள ஈழவேந்தன் எம்.பி. தொடர்பாக கட்சி என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?" - என்று நேற்று கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் சம்பந்தனிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

"எமது உறுப்பினர்கள் அனைவருக்கும் நாம் உத்தியோகபூர்வமாக அறிவித்தல்களை அனுப்பியிருந்தோம். ஈழவேந்தன் எம்.பி. இப்பொழுது வெளிநாட்டில் இருக்கின்றார். அவர் நாடு திரும்பியவுடன் அவரிடம் கட்சி விளக்கம் கோரும்" - என்று சம்பந்தன் எம்.பி. பதில் அளித்தார். (சி)

## கடத்தப்பட்ட ஈழப் பெண் மீட்பு; சந்தேக நபர்கள் மூவர் கைது!

சென்னை,நவ.25

சென்னை, வில்லிவாக்கம் பகுதியில் வைத்து ஈழத்தமிழ் இளம்பெண்ணொருவர் காரில் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சொத்துக்காகத் திருமணம் செய்து கொள்ளவே இந்தக் கடத்தல் இடம் பெற்றதாகப் பொலிஸ்விசாரணைகளையடுத்துத் தெரியவந்திருக்கின்றது.

சென்னை வில்லிவாக்கம், வடக்கு ஜெகநாதன் நகர் 7ஆவது தெரிவில் வசிப்பவர் ராஜேந்திரன். இவர் இலங்கையைச் சேர்ந்தவர் என்றும், இவரது தம்பி மகள் மெரினா சுபேதினியை (வயது 21) திங்கட்கிழமை காரில் வந்த மர்ம நபர்கள் மூவர் கடத்திச்சென்றனர் என்றும்,இது குறித்து ராஜமங்கலம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சந்திரஹாசன் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.


விசாரணையில், சுபேதினியை அவரது தாய் புஸ்பமாலாவின் (வயது 40) ஆலோசனைப்படி சொத்துக்காகத் திருமணம் செய்துகொள்ள இலங்கையைச் சேர்ந்த செல்வநேசன் (வயது27) என்பவர் கடத்தினார் எனத் தெரியவந்தது.

இதையடுத்து செல்வநேசன், அவருக்குத் துணையாகவிருந்த தர்மபுரி அகதிகள் முகாமை சேர்ந்த மரியன்குரூஸ் (வயது 30) செங்கல்பட்டு முகாமைச் சேர்ந்த ராஜிதாஸ் (வயது 25) ஆகியோரைப் பொலிஸார் கைது செய்தனர். கடத்தப்பட்ட சுபேதினியையும் பொலிஸார் மீட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

### நாளை

| | |
|---|---|
| கார்த்திகை - 10 | திங்கட்கிழமை 26.11.2007 |
| திதி : துதியை | பி.ப. 04.39 |
| நட்சத்திரம் : | மிருகசீரிடம் முன்னிரவு 09.55 |
| சுபநேரம் | : 12.12 - 01.42 |
| ராகுகாலம் | : 07.42 - 09.12 |

## விநாயகர் விரதம் இன்று ஆரம்பம்



இன்று விநாயகர் விரதம் ஆரம்பமாகின்றது. தனக்கு மேல் வேறு நாயகன் இல்லாதவர் விநாயகர். நாங்கள் எக்கருமத்தை ஆரம்பித்தாலும் முதலில் பிள்ளையாரை வணங்கியே ஆரம்பிப்போம். எமக்கு வருகின்ற விக்கினங்களையெல்லாம் நீக்கியருள்கின்ற விக்னேஸ்வரப் பெருமானைக் குறித்து அனுட்டிக்கப்படும் இந்த விரதம் மிகப் புனிதம் வாய்ந்ததும் மகிமையுடையதுமாகும்.

இருப்பத்தொரு நாள் அனுஷ்டிக்கப்படும் இந்த விரதம் கார்த்திகை மாதம் கிருஷ்ண பட்சம் பிரதமை முதல் தொடங்கி சுக்கிலபட்ச விநாயக ஷஷ்டி ஈறாகப் பிள்ளையார் கதை படிப்புடன் பக்தி பூர்வமாக நடைபெறும்.

விநாயகர் விரதத்தைப் பக்தி பூர்வமாக அனுட்டித்தால் வாழ்வில் சகல செளபாக்கியங்களும் கைவரப் பெற்று நோய் நொடிகள் நீங்கி ஆரோக்கிய வாழ்வு வாழலாம் என்பது ஆன்றோர் நம்பிக்கை.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம் கை.

என்பது பாடல்.

விநாயகரே எமது வெவ்வினைகளை வேரறுத்து எம்மை வாழ வைப்பவன். ஆகவே இருபத்தொரு இழையினாலான நூலைக் காப்பாகக் கட்டி, இருபத்தொரு விதமான பலகாரம் படைத்து, இருபத்தொரு வில்வங்களால் அர்ச்சித்து இருபத்தொரு நாள் விநாயகரை விரதமிருந்து வழிபட்டால் நினைத்த காரியம் கைகூடும் என்பது நம்பிக்கை. வீண்பழி அகலும் பகைவர்களும் நண்பராவர். தீவினை அகலும். மனச்சுமை நீங்கும். சகலவிதமான தோஷங்களும் நம்மை விட்டு நீங்கிவிடும்.

சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைச்சிப்பந்தி, தொழிலாளி ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், நவ.25

உரும்பிராயில் கடைச் சிப்பந்தி ஒருவரும் அரியாலையில் தொழிலாளி ஒருவரும் இனந்தெரியாத ஆயுதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர். கடைச் சிப்பந்தி அவர் பணிபுரியும் வர்த்தக நிலையத்துக்குச் சமீபமாகவும் தொழிலாளி அவரது வீட்டில் வைத்தும் முறையே காலையிலும், இரவிலும் கொலை செய்யப்பட் டுள்ளனர்.

உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக நேற்றுக்காலை 7 மணியளவில் கடைச்சிப்பந்தி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த பழனியாண்டி செல்வராசா(வயது 32) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

வழமைபோல் தாம் பணிபுரியும் வர்த்தக நிலையத்துக்கு தண்ணீர் எடுக்கச் சென்றவேளை அவரை ஆயுததாரிகள் மறித்துச் சுட்டனர் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா மரண விசாரணைகளை நடத்தினார். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை -

அரியாலை, ஆனந்தன்வடலி வீதியில் வெள்ளிக்கிழமை இரவு7.30 மணியளவில் கூலித் தொழிலாளி ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதேயிடத்தைச் சேர்ந்த துரைராஜா (ஜெயராசா வயது 41) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இந்த மரணம் குறித்து யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

வழமைபோல் வீட்டில் இரவு உணவை முடித்துக்கொண்டு அருகில் உள்ள மாட்டுக்கொட்டிலுக்கு படுக்கைக்குச் சென்ற வேளை சுடப்பட்டார் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## மோதல் தவிர்க்கப்பட்டது

சென்னை, நவ.25

ஈரோடு மாவட்டம் கோபியில் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு அஞ்சலி தெரிவித்து வைக்கப்பட்டிருந்த பதாகைகளை அகற்ற முயன்ற காங்கிரஸ் கட்சியினருக்கும் தமிழ் உணர்வாளர்களுக்கும் இடையில் நேற்று ஏற்படவிருந்த மோதல் தவிர்க்கப்பட்டது.

கோபியில் நேற்று காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் கூட்டம் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்ட இந்திய மத்திய அமைச்சர் இ.வி.கே.எஸ்.இளங்கோவன், தமிழ் நாட்டில் எங்கு தமிழ்ச்செல்வனின் அஞ்சலிச் சுவரொட்டிகள் இருந்தாலும் அவற்றை அகற்றுங்கள் என்று கட்சித் தொண்டர்களிடம் தெரிவித்தார்.

அதனையடுத்து காங்கிரஸ் தொண்டர்கள் அங்கு கட்டப்பட்டிருந்த பதாகை ஒன்றை அகற்ற முனைந்தபோது அவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)



சுவிஸ் சிவன் கோயிலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாவீரர் வணக்கப் பூசையின் போது எடுக்கப்பட்ட படம்.

## ஆளுமை பயிற்சிப் பட்டறை நேற்று ஆரம்பமாகியது

நல்லூர், நவ.25

இயூரேக்கா ஆளுமை அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பட்டிலான ஆளுமை விருத்தி பயிற்சிப் பட்டறை நேற்று யாழ். ரில்கோ ஹோட்டலில் ஆரம்பமானது.

நிறுவனத்தின் அமைப்பாளர் திருமதி மாதவி பாஸ்கரன் தலைமையில் ஆரம்பமான இந்தப் பட்டறையை செலான் வங்கி முகாமையாளர் எஸ்.அரவிந்தன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் ஆளுமையை அபிவிருத்தி செய்யும் இலக்குடன் இந்த அமைப்பு முதல் தடவையாக யாழ்.நகரில் இரு தினங்கள் பயிற்சிகளை நடத்துவதாக அமைப்பாளர் தமது உரையில் தெரிவித்தார்.

நிபுணர்கள், காப்புறுதி நிறுவன அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இரண்டாவது நாளான இன்று வங்கியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது. வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை காலை 8.30 மணிக்கு அதனைத் தொடக்கி வைப்பார். (அ-111)

## பண்ணையில் இன்று மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், நவ.25

யு.என்.ஹபிராட் அமைப்பும் யாழ். லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும இலவச மருத்துவமுகாம் இன்று காலை 9.30 மணி தொடக்கம் யாழ். பண்ணை ஆஸ்பத்திரியில் நடைபெறவுள்ளது.

மீனாட்சிபுரம் (ஜே/81 கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்காக இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அமுக்கப் பரிசோதனை, பல [illegible] றும் பொதுப் பரிசோதனைகள் இந்த முகாமில் இடம்பெறும். (1)

## வலி.கிழக்கு முன்பள்ளிகளுக்கு இன்று சத்துணவு விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.25

வலி.கிழக்கு பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்ட அனைத்து முன்பள்ளி மாணவர்களுக்கும் (ஜீவாகாரம், சீனி ஆகிய) சத்துணவு இன்று காலை 9.30 மணிக்கு வலி.கிழக்கு பிரதேச சபை தலைமையகத்தில் வைத்து வழங்கப்படும்.

முன்பள்ளி ஆசிரியர்களை சமுகம் தந்து சத்துணவை பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச சபையின் செயலாளர் கேட்டுள்ளார். (அ-1)

## சுவிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவுப் பாடல் இசைக்க அடியார்கள் நெய் விளக்கு ஏந்தி நினைவாலயத்தை வலம் வந்து மலர் தூவி வழிபட்டனர்.

'மாவீரர்கள் வணக்கத்துக்குரியவர்கள்' என்ற தலைப்பில் ஆலயக்குரு உரையாற்றினார்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் அல்பேர்ட் சிறப்புரை நிகழ்த்தினார். (அ)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம ஈரானுக்கு செல்லமாட்டார் என்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹுசைக் பைலா, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கொஹன்ன ஆகியோர் ஜனாதிபதியுடன் செல்வர் என்றும் வெளிவிவார அமைச்சு தெரிவித்துள்ளது.

பொருளாதார மற்றும் உல்லாசப் பயணத் துறை அமைச்சுக்களின் அதிகாரிகள் குழுவும் தனியாகச் செல்கிறது.

ஜனாதிபதி 29ஆம் திகதி கொழும்பு திரும்புவார். (அ-1)

## பொதுநலவாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

53 நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்ட பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகமான நியூசிலாந்தைச் சேர்ந்த டொன் மக்கினன்னின் பதவிக் காலம் அடுத்த வருடம் மார்ச் மாதம் முடிவடைகிறது. அதன் பின்னர் புதிய செயலாளர் நாயகமாக பதவியேற்பார். (அ-1)

## மனைவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை ரூபசிங்க துப்பாக்கியால் சுட்டதாக சபுஸ்கந்த பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

அதன் பின்னர் ரூபசிங்கவே தனது மனைவியை மருத்துவமனையில் சேர்த்துள்ளார். ஆனால் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். இக்கொலை தொடர்பாக பிரிகேடியர் ரூபசிங்கவை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

## பாதுகாப்பை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெயர்ந்தோர், உரிய தேவைகள் நிறைவேற்றப்படாமல் பலவந்தமாக மீளக்குடியமர்த்தப்படுவது குறித்து இங்கு பத்திரிகையாளரிடம் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு கவலை வெளியிட்டார்.

கிழக்கிலங்கையில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களின் பாதுகாப்பு மிகவும் சீர்கெட்டு வருவது குறித்து தமது ஸ்தாபனம் மிகவும் கவலை அடைவதாகவும் அது விடயத்தில் அக்கறை கொண்டுள்ளதாகவும் ஜெனிபர் பகோனிஸ் கூறினார்.

எண்ணற்ற படுகொலைகள், கடத்தல்கள், சித்திரவகைகள் எனப் பொதுவாக பாதுகாப்பற்ற நிலையே கிழக்கில் இருப்பதாக யு.என்.எச்.சி.ஆருக்கு அறிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன இத்தகைய நிலைமையினால் உள்நாட்டில் இடம்பெயர்ந்திருக்கும் அகதிகள் மீளவும் தங்கள் வாழ்விடங்களுக்கு திரும்ப இயலாத நிலமை உள்ளது.

இடம்பெயர்ந்தோரின் வீடுகள் சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. இதனால் அவர்கள் மீண்டும் தங்கள் வாழ்விடங்களுக்குச் செல்வது பாதிக்கப்படுகிறது.

92 குடும்பங்களைச் சேர்ந்தோர் மீளக் குடியமர விருப்பம் இல்லையென்று எமக்குத் தெரிவித்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் நிவாரணப் பொருள்களும் சூறையாடப்பட்டுள்ளன.

சர்வதேச நடைமுறைகளுக்கு ஏற்ற வகையில் இடம்பெயர்ந்தோர் தாங்களாகவே மீளக்குடியேறுவதை அரசாங்கம் உறுதி செய்யவேண்டும்.

இடம்பெயர்ந்தோரின் உரிமை [illegible] தொடர்பான வல்லுநர்களுடன் அரசாங்கம் ஆலோசனை நடத்தவேண்டும் என்றும் ஜெனிபர் பகோனிஸ் தெரிவித்தார். (அ)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் அங்கு வந்த ஆயுததாரிகள் அவரை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். அவர் அங்கிருந்து ஓடித்தப்பி, பல்லைக்கழக வளாகம் நோக்கிச் சென்றார். அவரைக் கலைத்துக் கலைத்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என்று விசாரணையில் தெரிவிக் கப்பட்டது.

அவர் பணியில் இருந்த இடத்தில் இருந்த சுமார் 100 மீற்றர் தூரம் வரை இரத் தக்கறை காணப்பட்டது என்றும் 18 தோட்டாக்கள் மீட்கப்பட்டன என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

விசாரணையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-50-86)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலாம் திகதியும் கூடவிருக்கின்றன.

கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களின் காணிகளை அரசு சுவீ கரிப்பதை நிறுத்வேண்டும் என்றும் -

கிழக்கு அபிவிருத்திப் பணியில் முஸ்லிம் மக்களுக்கு சம உரிமை வழங்க வேண் டும் என்றும் -

முஸ்லிம் காங்கிரஸ் அரசிடம் கோரியுள்ளது. இவ்விரு விடயங்கள் குறித்தும் கட்சியின் உயர் மட்டக் குழு ஜனாதிபதி யின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷவுடனும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயுடனும் வரவு - செலவுத் திட்டம் மீதான முதலாவது வாக்கெடுப்பு நடை பெற்ற கடந்த திங்கட்கிழமை பேச்சு நடத்தியிருந்தது.

இவ்விடயங்கள் தொடர்பாக சாதகமான பதில் அரச தரப்பில் இருந்து கிடைக்கவில்லை என்றும் அடுத்த வாக்கெடுப்புக்கு முன் உரிய பதில் கிடைக்காவிட்டால் முஸ்லிம் காங்கிரஸ் வரவு -செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்கக்கூடும் என்றும் கட்சியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (அ-1)

## டெஸ்டில் சிறந்த.....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

### வூல்மர் மரணம் குறித்த நீதிமன்ற விசாரணை முடிவு

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் போது நடைபெற்ற பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பொப்வூல்மரின் மர்மமான மரணம் குறித்து கிங்ஸ்டன் நீதிமன்றத்தில் நடைபெற்றுவந்த விசாரணை முடிவடைந்துள்ளது. பொப் வூல்மரின் மரணம் குறித்து 11 நீதிபதிகள் அடங்கிய குழு விசாரணை கடந்த 5 வாரங்களாக நடைபெற்று வந்தது. இந்த விசாரணையின் போது 50 பேர் நீதிமன்றத்தில் ஆஜராகி வாக்கு மூலங்கள் அளித்தனர். இந்த வழக்கில் தீர்ப்பு அளிக்கப்பட்ட பின்னரே பொப்வூல்மரின் மரணத்திற்கான காரணம் குறித்து அதிகாரபூர்வமாக நீதிபதி பெட்ரிக் மர்பி அறிவிப்பார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உலகக் கிண்ண லீக் சுற்றில் பாகிஸ்தான் தோல்வி அடைந்த பின்னர் கடந்த மார்ச் 18 ஆம் திகதி பொப் வூல்மர் தனது ஹோட்டல் அறையில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். அவரது உடலில் விஷம் கலந்திருந்ததாகவும் அவர் கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் முதலில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவர் இயற்கையான முறையில் மரணம் அடைந்ததாக பின்னர் [illegible]


THE BEST

| | |
|---|---|
| 256 DDR1,512 DDR2 | 2650/- |
| 256 DDR2 | 1750/- |
| 1 GB DDR2 | 4100/- |
| 512 DDR1 | 4600/- |
| FLASH 1 GB | 1750/- |
| AsRock LGA | 6750/-, 8400/- |
| Asus LGA | 8500/-, 10250/- |
| Intel Original | 10500/-, 15000/- |
| HP D 1360 Printer | 6500/- |
| All in One Printer (Printer, Scanner & Copier) | 14500/- |
| LQ300+II | 25900/- |
| Hp1020 LaserJet | 20500/- |
| Keizer(Japan) LaserJet | 29000/- |
| TV Combo & Captures | 4500/- |

More in LOW Priced
Processors Intel D 3.06, 3.0/2M, Dual Core 3.0/4M & Core 2 Duo
15" & 17" CRT & LCD Monitors
IDE & SATA COMBO & DVD-RWs
HP Genuine 12A, 13A, 15A, 49A, 53A & 92A & Canon E25 & E303 Toners

Complete Computer From 39900/-

Blank Cds, Video Cassettes, Panosonic (JAPAN) Charger Lights

We are not Big but The Best
UNIT மனோகரா சந்தி 347, K.K.S Road, Jaffna 4590720,0773134737



புலமைப்பரிசில் 2008
பயிற்சிப் பரீட்சை 7
25.11.07 (இன்று)
ஞாயிறு பரீட்சை
விரும்பிய நேரங்களில்
காலை 8.30, 10.30, 2.30
வெளி மாணவர்களும் தோற்றலாம்
நாவலர் ஆனைப்பந்தி, யாழ்.நகர்



Physics, Chemistry ஆகிய பாடங்களுக்கு Personal/Group Class எடுப்பதற்கு தகுந்த ஆசிரியர்கள் ஒழுங்கு செய்து தரப்படுவர்.
தொடர்பு : Mr.S.Rajah(B.Sc)
0774319932
திருநெல்வேலி.



THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
புலங்கள்
ஆரம்பம்
26.11.2007
திங்கள் புதன் வெள்ளி 6:15 am to 7:30 am



CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
26.11.07 (Mon)
Diploma in Office Management (Ms Office)
Diploma in DTP & Graphics Design
Kid's Programmes (Grade 1- 8)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org